Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 17 [30-04-93] வெள்ளிக்கிழமை ஓசை 71

## புதிய அடையாள அட்டை விநியோகிக்கத் திட்டம்

ஆளடையாள அட்டைகளில் நடைபெறும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக புதியரக ஆளடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. இது குறித்து மேற்படி திணைக்கள அதிகாரிஒருவர் தெரிவிக்கையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த ஆளடையாள அட்டைகளில் மோசடிகள் தொடர்ந்து இடம் பெறுவதாக கிடைத்த புகார்களை அடுத்து மாற்ற முடியாத ஆளடையாள அட்டைகளை வழங்க திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு [9 ஆம் பக்கம் பார்க்க]

# கொழும்பிலிருந்து ஈ.பி.டி.பி. திருமலைக்கு விரட்டப்பட்டது

## எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தலுக்கு பிரேமதாசா அரசு பணிந்தது

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. குழுவினரின் கொழும்பு அலுவலகம் மூடப்பட்டதாகவும் அங்கிருந்த உறுப்பினர்கள் அவசர அவசரமாக திருக்கோணமலைக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பி பி, ஸி. நேற்றிரவு தெரிவித்தது. பிரேமதாசா அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகள் கொடுத்த அழுத்தமே இந்நடவடிக்கைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

லலித் கொலை தொடர்பாக ஈ. பி. டி. பி. குழுவினர் மீது பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும், இவர்களிடம் இருக்கும் ஆயுதங்கள் ஜனநாயக செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருவதாகவும், அரசாங்கம் இவர்களின் செயற்பாடுகளைஉடன் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திடம் வற்புறுத்தி வந்தன.

இதனைத் தொடர்ந்தே ஈ.பி.டி. பியினர் உடனடியாக கொழும்பிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என தொடர்ந்தும் எதிர்க்கட்சிகள்வற்புறுத்தி வருகின்ற போதிலும் இதுவரை அவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசு சார்பு தமிழ்க் குழுவின் ஆயுதம் களைய வற்புறுத்து

''அரசுக்குச்சார்பான தமிழ்க் குழுவொன்று கொழும்பில் ஆயுதங்களுடன் திரிகின்றது. இக்குழுவிடம் இருக்கும் ஆயுதங்கள் சகலதையும் அரசு களைய வேண்டும். இல்லாவிட்டால் அக்குழுவின் தலைமையகத்திற்கு மக்கள் சகிதம் சென்று நாம் ஆயுதங்களைக் களைவோம்'' இவ்வாறு அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்கவைச் சந்தித்த சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான எதிரணித் தூதுக்குழு எச்சரிக்கை விடுத்தது.

இது அரசியல் தீர்மானத்திற்குரிய விடயம். எனவே அரசியல் அதிகாரபீடத்திடம் விடயத்தை எடுத்துக் கூறுவோம என அப்போது எதிரணிக் குழுவிடம் உறுதிமொழி அளிக்கப்பட்டதாம்.

## ராணுவ தலைமையகத்திற்கு குண்டு வைக்க முயற்சியாம்

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமை அலுவலகத்தை குண்டுவைத்து தகர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் இதற்காக புலிகளின் குண்டுத் தாக்குதல் படைப் பிரிவொன்று இரண்டு வெள்ளை நிறத்திலான வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனங்களுடன் கொழும்புநகருக்குள் நுழைந்துள்ளதாகவும் அரசின் புலனாய்வுத் துறை அறிவித்துள்ளது.

இதனால் இராணுவத் தலைமை அலுவலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அத்துடன் கொழும்பு நகரில் பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் ரோந்துப் பணிகளைத் தீவிரமாக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தினது பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம்கோரப்படுகிறது

(கொழும்பு)

1992- 1993 பல்கலைக்கழக கல்வியாண்டிற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளவுள்ளது. 1991 ஆகஸ்ட், 1992 ஏப்ரல் உயர்தரப் பரீட்சைகளில் பல்கலைக் கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த நிபந்தனையை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் மே மாதம் 10 ஆம் திகதி முதல் ஜூன்மாதம்10ஆம்திகதிவரை விநியோகிக்கப்படும் எனவும் விண்ணப்பங்கள் ஜூன் 11 ஆம் திகதிவரை ஏற்றுக் [10 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

வைத்திய சிகிச்சை பெற கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு தமது காரியாலயத்தில் சமுகம் அளிக்கும்படி யாழ். பொது வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளர்கள் தமது அடையாள அட்டைகள் மற்றும் சிபார்சுக் கடிதங்கள் என்பனவற்றை தம்முடன் எடுத்து வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (21)

அமைதியாக இருந்த மக்கள் மீது

## உலங்குவானூர்தியிலிருந்து கண்ணீர்ப் புகைக் குண்டு

[கொழும்பு]

கனத்தை மயானத்தில் அமைதியாக அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த மக்கள் மீது உலங்குவானூர்தியிலிருந்து தேவையற்ற விதத்தில் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டதாககாமினிதிசாநாயக்க தெரிவித்தார்.

தான் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது தேவையற்ற விதத்தில் தனியாருக்கு சொந்தமான உலங்குவானூர்திகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை 'பரசூட்' மூலம் வீசியதாக [10 ஆம் பக்கம் பார்க்க]

## இனம் தெரியாத குழுவினரே கலவரத்தைத் தொடக்கினர்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வல நிகழ்ச்சியைக் கறுவாக்காட்டுபொலிஸ் நிலையத்திலிருந்துரூபவாகினி படப்பிடிப்புக் குழுவினர் படம் பிடிக்க முயன்ற போதே பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதென நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இறுதி ஊர்வலத்துடன் சென்று கொண்டிருந்த ஓர் இனம் தெரியாத குழுவி (10 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை தொழிலாளர் தினம் யாழ்நகரில் எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சர்வதேசதொழிலாளர் தினமான மே தினம் நாளை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் மாபெரும் எழுச்சிப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

இவ்வெழுச்சிப்பேரணி கண்டி வீதி - ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். கோட்டரீதியாக பல்வேறு அணிகள் இவ்வூர்வலத்தில் கலந்துகொள்ளவுள்ளன. ஆஸ்பத்திரிவீதி, கோவில் வீதி, நல்லூர் வீதி, பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி, தொழில்நுட்பக் கல்லூரி முன்புறமாக பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை இவ்வூர்வலம் சென்றடையும்.

மே தின எழுச்சி நாளை அனுஷ்டிப்பதற்காகக் குடாநாட்டில் கடந்த இருவார காலமாகத் தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. யாழ். நகரப் பகுதிகளிலும், புறநகர்ப் பகுதிகளிலும் மே தின எழுச்சிக்கு மக்களை அழைக்கும் எழுச்சிக்கோஷங்களைத் தாங்கிய சிவப்பு நிறத்தினாலான பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் பிரதானவீதிகள் மற்றும் சந்திகள் போன்ற இடங்களில் சிவப்பு. மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. வீதிகள் தோறும் மே தின எழுச்சிக்கோஷங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மேலும் பல்வேறு தொழிலாளர் சங்கங்கள் ஏனைய தொழிலாளர் அமைப்புக்கள், பொதுசன அமைப்புக்கள் போன்றவையும் மற்றும் அரச, தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவையும் மே தின எழுச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. இதற்காகப் பல்வேறு கருத்தியல் அம்சங்களைத் தாங்கிய ஊர்திகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நாளைய எழுச்சிப் பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடையும் நிலை [10ஆம் பக்கம் பார்க்க]

# ஆயிலியப்பிட்டி மர்மக் கொலை இருவருக்கு மரண தண்டனை

[யாழ்ப்பாணம்]

தாவடியைச் சேர்ந்த நவரட்ணராஜா சுதர்சன் (வயது 20) என்பவருடைய படுகொலை தொடர்பாக குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக தமிழீழக் காவல்துறையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில்:

தாவடியைச் சேர்ந்த நவரட்ணராஜா சுதர்சன் (வயது 20] என்பவருடைய படுகொலை சம்பந்தமான விசாரணையை தமிழீழ காவல்துறையினர் பூர்த்தி செய்துள்ளனர். 06-01-92 ஆம் திகதி அன்று கொலையுண்ட நவரட்ணராஜா சுதர்சனின் உடல் நாவற்குழி கேரதீவுப் பாதையில் அமைந்துள்ள ஆயிலியப்பிட்டி மயானக் கிணற்றிலிருந்து மீட்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மர்மக் கொலை பற்றி தமிழீழ காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையை மேற்கொண்டு வந்தது. இந்த விசாரணையின் பயனாக கோண்டாவிலில் வசித்துவந்த நடராஜா தயானந்தன் (காளிதாஸ்), கொக்குவிலைச் சேர்ந்த சிவகுருநாதன் குணநேசன் (குகன்) ஆகியோர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். காவல் துறையினரின் நீண்ட விசாரணையின் பின்னர் மேற் குறிப்பிட்ட சந்தேகநபர்கள் காளிதாசும், குகனும் கொலைக் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ளனர்.

காவல்துறையினரின் விசாரணையின் போது இந்தக் கொலை சம்பந்தமாக தெரிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

5KV இற்கும் 10KV இற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக் கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4786)

### காணியும் வீடும் விற்பனைக்குண்டு

கண்டி வீதி மிருசுவில் சந்தைக்கருகாமையில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு, கிணறு, தென்னை, மாபோன்றவற்றுடன் அமைந்த 10பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- திருமதி யோசப் ''ஜீவோதயம்'' கண்டி வீதி, மிருசுவில். (சி/3396)

### ''நீம் தூபம்''

சுகவாழ்வுக்குக் காலை மாலை நீம் தூபம் இதமான இயற்கை நறுமணம் கொண்டது அண்ண கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி/6518)

### வேப்பம் பூ தேவை

வேப்பம் பூ தேவைப்படுகிறது. ''மில்க்வைற்'' (சி/6517)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஒட்டோ மற்றிக் கடிகாரங்கள், மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:
டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்
3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி/6508)

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் நிழற்படப் பிரதிபண்ணல்

### கேள்வி விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் நிழற்பிரதி பண்ணுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இது சம்பந்தமான விபரங்களை யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 1993-05-10ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும்

(கா. மாணிக்கவாசகர்),
மாவட்டப் பதிவாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்,
27-04-1993
(சி-6535)

## நாடக விழா

(மல்லாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விஞ்ஞான மன்ற மாணவர்களின் ஆதரவுடன் மாபெரும் நாடக விழா ஒன்று எதிர்வரும் மே 5-ம்திகதி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந் நாடக கலைவிழாவில் கருகிய மொட்டுக்கள் எனும் நிகழ்கால சமூக நாடகமும், சம்பூர்ண அரிச்சந்திரா என்னும் புராண நாடகமும் யூனியன் மாணவர்களால் நடாத்தப்படவுள்ளன. (09)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-30

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் வீரச்சாவெய்திய-

★ சாம் (பெனிஸ்டஸ் சிறில்- சின்னக்கடை - மன்னார்)

1986 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய.

திலகன் [நாகராசா கிருஷ்ணானந்தன்-குமுழமுனை-மணலாறு]

லோகன் (மு.லோகேஸ்வரன்-குமுழமுனை-மணலாறு)

நிமல் [தியாகராசா செல்வராசா-சிலாவத்தை முல்லைத்தீவு)

ஜெயந்தன் [பொன்னையா அமிர்தலிங்கம்-வற்றாப்பளை-முல்லைத்தீவு)

நாகேந்திரன் (நாகராசா சின்னத்தம்பி-வற்றாப்பளை-முல்லைததீவு)

வில்வன் (பொ.சிவபாலசுப்பிரமணியராசா -முல்லைத்தீவு]

சிவகுமார் (இரத்தினசிங்கம் கேதீஸ்வரன்-2ம் வட்டாரம், முள்ளியவளை-முல்லைத்தீவு)

இலங்கேஸ் (தம்பிராசா அன்ரன் இராசரத்தினம்-வற்றாப்பளை-முல்லைத்தீவு)

யாழ்-கல்வியங்காட்டில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய.

அலிஸ்ரன் (மதுாநாயகம் அலிஸ்ரன் - ''அன்ரனி வாசம்'', நாகம்மா வீதி, உடுவில்-யாழ்)

ரமேஸ் (ஜெராட் யோகராசா - ''பிறேமா இல்லம்'', சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பு-யாழ்]

1987 ஆம் ஆண்டு யாழ்-வல்வெட்டித்துறையில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்சொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

சுதா (பாக்கியநாதர் பவளத்துரை-பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை-யாழ்.

1988 ஆம் ஆண்டு மன்னார் உயிலங்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் வீரச்சாவெய்திய

சாள்ஸ் (குமாரகுலசிங்கம் வேலவன்-வாளித் தொழிற்சாலை மாவிட்டபுரம்-யாழ்)

இதே இடத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய.

ஆனந்தன [---]

இதே ஆண்டு தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ சைமன் ஜோதிராஜா (காரைதீவு. கல்முனை-அம்பாறை)

மட்டுநகரில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

★ ஆனைக்குட்டி (எச். சி. ரஞ்சித்-காரைதீவு, கல்முனை-அம்பாறை)

1989 ஆம் ஆண்டு யாழ்-திருநெல்வேலி-மணல் தரையில் இந்தியப்படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கப்டன் வரதப்பா (சீவரத்தினம் சிறிபாஸ்கரன்-தையிட்டி, காங்கேசன்துறை-யாழ்)

யாழ்-நீர்வேலியில் இந்தியப்படையினருடனான சமரின் போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய

கப்டன் கண்ணாடிராஜன் (இராசதுரை ஜெயக்குமார்-நீர்வேலி வடக்கு-யாழ்)

யாழ்-கோண்டாவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

வசந்தன்/சங்கர் (வசந்தகுமார்-யாழ்ப்பாணம்)

யாழ்-கொக்குவிலில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான பல்கலைக்கழக வரலாற்றுத்துறை-மாணவன்

சின்னத்துரை பிரபாகரன் (முள்ளியவளை-முல்லைத்தீவு)

1991 ஆம் ஆண்டு மட்டு - மகிழவெட்டுவான், கரவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

தீசன் (ப.யோகராசா-நெடியவெட்டை, மண்டூர்-மட்டு)

குணசீலன் (கா. கணேசமூர்த்தி-கோயில் போரதீவு, -மட்டு)

ராம்குமார் (-புவனநாதன்-மகிழடித்தீவு. கொக்கட்டிச்சோலை-மட்டு)

விக்கினேஷ் (புல்லுமலை-மட்டு)

வவுனியா ஓமந்தைப்பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய

வல்லவன் (- வைரவப்பெருமாள் பாலசிங்கம்-கல்மடு வீதி, புளியங்குளம், ஓமந்தை-வவுனியா)

யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த.

லெப். அப்பா (சுந்தரலிங்கம் குமாரகுலசிங்கம் வேல் வீதி, மயிலிட்டி-யாழ்)

காமினி (செல்வம் காமினி-18, சந்தோசம் வீதி. கொழும்புத்துறை-யாழ்]

சிவனேசன் (ஆறுமுகம் சிவனேசன்-மோகனதாஸ்வீதி, கொக்குவில் மேற்கு-யாழ்)

சிறிகாந் (சிவப்பிரகாசம் சிறிகாந்-ஆடியபாதம் வீதி, கோணாமலை, கொக்குவில்-யாழ்)

ஸ்ரீபன் [அல்வீனப்பா தர்மன் ஸ்ரீபன்-13/6, 5ம் குறுக்குத்தெரு, தண்ணீர்த்தாங்கியடி, -குருநகர்-யாழ்]

ஆனந்தராஜ் [செலஸ்ரீன் ஆனந்தராஜ்-17/11 சென் ஜேம்ஸ் வீதி, குருநகர்-யாழ்]

நாகேஷ் (பெரியசாமி நாகேஷ் - 27/16, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. யாழ்.)

குமார் (கார்த்திகேசு குமார் - நாவலர் வீதி, நல்லூர் - யாழ்.)

பபீந்திரன் (திருநாவுக்கரசு பபீந்திரன் - உரும்பராய் கிழக்கு - யாழ்.)

மதியழகன் - அழகன் (சுப்பிரமணியம் மதியழகன் 16/1, முத்தமிழ் வீதி, 1-ம் ஒழுங்கை, கொட்டடி - யாழ்.)

சிறிதரன் (டேவிற் பாலகிருஷ்ணன் சிறிதரன்- 16, இராசாவின் தோட்டம் யாழ்.)

டேவிற் (லோறன்ஸ் தோமஸ் - 143/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழிளைஞன் மற்றும் செங்கலடியைச் சேர்ந்த தமிழ் கட்டிடத் தொழிலாளி.

1992ஆம் ஆண்டு யாழ் - மாவிட்டபுரம் தச்சன் காட்டுச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

கப்டன் அறவாணன் / தவம் (வேலாயுதபிள்ளை தவக்குமார் - இரணைமடு - கிளிநொச்சி)

லெப். செந்தில் (செல்லத்துரை ஈஸ்வரன் - அகிலேஸ்வரன் வீதி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - யாழ் )

லெப். நிலன் / சசி (சுந்தரலிங்கம் சசிலிங்கம் கேணியடி ஒழுங்கை, நீர்வேலி வடக்கு - யாழ்.)

2-ம் லெப். கார்வண்ணன் / ரமணன் (கனகலிங்கம் கருணதாஸ் - அருச்சனா வீதி - யாழ்)

கிளி - ஆனையிறவுமுகாம் பகுதியில் வேவுபார்த்த வேளை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

2-ம் லெப். இளந்தேவன் / தவபாலன் (தர்மலிங்கம் ராஜேஸ்வரன் - உரும்பராய் வடக்கு - யாழ்).

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6531)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

## 1993 மாபெரும் மே தினம்

1993 மே 1 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு யாழ். செயலக முன்றலில் இருந்து யாழ். பல்கலைக்கழக மைதானம் வரை நடைபெறவிருக்கும் மாபெரும் மேதின ஊர்வலத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மாபெரும் மேதினக் கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு சகல தாய்ச் சங்க, மாவட்ட சங்க கிளைச்சங்க நிர்வாகிகளையும், சகல உறுப்பினர்களையும் அழைக்கின்றோம். ஊாவலத்தில் கலந்துகொள்வதற்காக பி. ப. 1.30 மணிக்கு யா/யாழ் பரியோவான் கல்லூரிக்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ. த. ஆ. ச. தலைமைப் பணிமனை
442 பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழப்பாணம்.
27-04-1993.

பொதுச்செயலாளர்
இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கம்

(4783)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

30 - 04 - 1993

தாயின் மடியில்
12 | 07 | 1971



மண்ணின் மடியில்
30 | 04 | 1992

### கப்டன் செந்தில் [கண்ணன்]

(செல்லத்துரை ஈஸ்வரன்)

30-04-1992 அன்று தச்சன்காடு இராணுவமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த கப்டன் செந்திலுக்கு எமது நினைவஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

''என்று மறப்போம் உமது இனிய நினைவை''

30-04-93 இன்று எமது இல்லத்தில் 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி இடம்பெறும்.

அகிலேஸ்வரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கோண்டாவில். (4780)

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரி,
சகோதரர்கள், அண்ணிமார்
பெறாமக்கள்.

# சீதனம்: பயனடைவது பெண்கள் பாதிக்கப்படுவது ஆண்கள்

நான் எனது சொந்த வாழ்வனுபவத்திலிருந்து இதை எழுதுகிறேன். மூன்று பெண் பிள்ளைகளைப்பெற்று அவர்களுக்கு வரன் தேடுவதில் நான் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், தொல்லைகள் என்ற கசந்த அனுபவத்திலிருந்தும், அதனால் நான் பெற்றுக் கொண்ட விழிப்புணர்விலிருந்தும் இதை எழுதத் துணிகிறேன். எனது கருத்துக்கள் பலருக்கு ஏற்புடையதாக இருக்கப் போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும். குறிப்பாகப் பெண்நிலைவாதிகள் எனது கருததுக்களை ஜீரணித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் உண்மையை, அதாவது நான் அனுபவத்தில் கண்ட உண்மையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இதற்கு மேடை அமைத்துத் தர முன்வந்த ஈழநாதத்திற்கு எனது நன்றிகள்.

சீதனமுறை என்பது பெண்ணினம் எதிர்கொள்ளும் ஒரு சமூகக் கொடுமை, ஒரு ஒடுக்குமுறை வடிவம், ஒரு சாபக்கேடு என்றெல்லாம் பலர் எழுதுகிறார்கள். சீதனம், பெண்ணை ஒரு விலைப் பொருளாக, ஒரு வியாபாரப் பண்டமாக மாற்றி விடுகிறது. பெண்ணின் தனித்துவத்திற்கும், கௌரவத்திற்கும் இழுக்கை ஏற்படுத்தி விடுகிறது என்றும் சிலர் வாதாடுகிறார்கள். இந்தப் பார்வை தவறானது. சிறுபிள்ளைத்தனமானது என்பதே எனது கருத்து. ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினையை ஆழமாகப் பார்க்காது, மேற்புல் மேய்ச்சலாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் இவை.

முதலில் சீதனம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். திருமணத்தின்போது மணப்பெண்ணிற்கு வழங்கப்படும் சொத்துடைமையைச் சீதனம் எனக் கூறலாம் பணம், நகை, வீடு, நிலம் என்றவகையில் மணப்பெண்ணிற்குப் பெற்றோர் உவந்தளிக்கும் சொத்துடைமையைச் சீதனமென தேச வழமைச் சட்டம் கூறுகிறது. இந்தச் சொத்துக்கள் பெண்ணுக்கே உரித்தானது. யாழ்ப்பாணத்தில் தாய்வழிச் சொத்து சீதனமாக மணப்பெண்ணுக்கே உடைமையாகிறது. இதனால் காலம் காலமாக யாழ்ப்பாணத்து நிலமும், சொத்தும் பெண்களின் ஆதிபத்தியத்தின் கீழ்த்தான் இருந்து வருகிறது.

மனைவியின் ஒப்புதல் இன்றிச் சீதனச் சொத்துடைமை மீது கணவன் கைவைக்க முடியாது. இவ்விதம் தேச வழமைச் சட்டம் பெண்ணின் சொத்துரிமைக்கு உத்தரவாதமளிக்கிறது. நடப்பியல் இப்படியிருக்க, சீதனத்தை மணமகனுக்கு வழங்கும் சொத்துடமையாகக் கருதுவது தவறானதாகும்.

நான் திருமணமானபோது எனது மனைவிக்கு அவளது பெற்றோர் சீதனம் கொடுத்தார்கள். பத்துப் பரப்பு நிலமும், வீடும் எழுதிக் கொடுத்தார்கள். நகையும் கொடுத்தார்கள். இந்த உடமை எல்லாம் அவளது சொத்தாக இருந்தது இந்தச் சொத்து இப்பொழுது எனது மூத்தமகளின் சீதனமாகக் கைமாறியிருக்கிறது எனது மூத்த மகளுக்கும இரு பெண் குழந்தைகள். ஒரு காலம் அந்தச் சொத்து அவர்களுக்குக் கைமாறும். இப்படியாக, தாய்வழியாக, பரம்பரை பரம்பரையாக, சீதனமாக சொத்துக்கள் பெண்களின் உடமையாகக் கைமாறிச் சென்று கொண்டிருக்கிறது.

நான் திருமணமானபோது எந்தவித சொத்தும் என்னை வந்து சேரவில்லை. திருமணமாகியதிலிருந்து ஓய்வின்றி உறக்கமின்றி மாடாக உழைத்து எனது பெண் பிள்ளைகளுக்கு சீதனம் தேடிக்கொடுக்கும் ஒரே இலட்சியத்தில்தான் எனது வாழ்க்கை நகர்ந்திருக்கிறது. நான் ஒரு கல்லூரி ஆசிரியன். சம்பளமும் பெரிதாக இல்லை வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி, விரதங்கள் கிடந்து, சீட்டு பிடித்து, கடன்பட்டு நான் தேடிய தேட்டமெல்லாம் எனது மற்றைய இரு பெண்களுக்கும் சீதனமாகஎழுதிக்கொடுத்ததுதான் மிச்சம். நான் இப்பொழுது ஓய்வு பெற்று, கடனாளியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் சீதனம் வாங்கி திருமணம் செய்தவன் என சமூக உலகம் எண்ணிக்கொண்ட போதும் எனது வாழ்க்கையோ சீதனத்தை தேடும் முயற்சியில் ஒய்வில்லாமல் உழன்றிருக்கிறது.

சீதனப் பிரச்சினை என்பது ஆணுலகம் எதிர்கொள்ளும் ஒரு சமூகப் பிரச்சினை. இது பெண்களின் பிரச்சினை அல்ல. இதனால் பெண்கள் பாதிக்கப்படுவதும் இல்லை. பெண்கள் வீட்டிலேயே சும்மா இருக்கிறார்கள். அவர்களின் விருப்பிற்கேற்ப, அந்தஸ்திற்கேற்ப ஒரு வரனைத் தேடுவதும், சீதனத்தைத் தேடுவதும் ஆண்களின் சுமையாக அமைந்து விடுகிறது. எனது பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரை சீதனம் பற்றி அவர்கள் சிந்தித்ததாக இல்லை. சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைப்பது 'அப்புவின் பொறுப்பு' என எண்ணிக்கொண்டு சும்மா இருந்தார்கள். அப்பு பட்ட கஷ்டங்கள்பற்றி அவர்கள் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை.

# சீதனம்
## ஒரு விவாத மேடை

பெண்பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து சீதனத்தை எதிர்பார்க்கிறார்கள். சீதனம் தமக்கு கிடைக்க வேண்டிய பிறப்புரிமை எனவும் எண்ணிக் கொள்கிறார்கள். தமக்கு நல்லதொரு மணமகனை தேடிக் கொடுப்பதும் பெற்றோரது தவிர்க்க முடியாத கடமைஎனவும் நினைத்துக் கொள்கிறார்கள். எமது யாழ்ப்பாண சமூகத்தில் இந்த எண்ணப்பாடு ஆழமாக வேரூன்றிக் கிடக்கிறது. இதனால் பெண்பிள்ளைகளைப்பெற்ற குடும்பத் தலைவனிடம் ஒரு பெரிய பளு சுமத்தப்படுகிறது. இந்தப் பெரும் பளு அவனை வாழ்க்கை பூராகவும் நசுக்கிக் கொண்டே இருக்கிறது.

இந்தச் சீதனப் பிரச்சினை எப்படி எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்தது என்பது பற்றி ஆய்வுகள் இல்லை. அரசர்கள் நிலப்பிரபுக்கள்வாழ்ந்த காலத்தில் சொத்துடமையுள்ள வர்க்கத்தினர் திருமணங்கள் மூலம் பெண் வழியாக தமது சொத்துடமைகளை தமது உறவினர்கள் மத்தியில் பரிமாறியிருக்கலாம். உயர் குலத்தினர் தமது சாதி வரம்பிற்குள் திருமணங்களைச் செய்து சொத்துக்களை தம் மத்தியில் பகிர்ந்திருக்கலாம். உயர் குலத்து சொத்துடமையாளரின் சொத்துப் பரிமாற்று வழக்கு சீதனமாக உருப் பெற்றிருக்கலாம் எப்படியிருப்பினும், இந்த சமூக சம்பிரதாயம் இப்பொழுது எல்லா சமூக மட்டங்களிலும் பரவி, சீதனம் திருமணத்திற்கு ஒரு நிர்ப்பந்தமாக வளர்ந்து விட்டது இதனால் பாதிப்படைபவர்கள் ஆண்களே.

சீதனமுறை பெண்களுக்கு சாதகமானது. பெண்களின் நலன்களையே அது பேணுகிறது. சீதனமுறை பெண்களின் சொத்துரிமையை நிலைநாட்டுவதுடன் அவர்களுக்கு சுய சார்பான ஒரு பொருளாதார அடித்தளத்தையும் உருவாக்கிக்கொடுக்கிறது. ஆண்கள் சீதனம் வாங்கி திருமணம் செய்துகொள்கிறார்கள் என்ற கோட்பாடு தவறானதாகும். உண்மையில், பெண்களே தமது பொருளுடமை சக்தியைக் கொண்டு ஆண்களை விலைக்கு வாங்குகிறார்கள். இந்தப் பொருளுடமை சக்தியைக் கொண்டு தமது சமூக அந்தஸ்தையும் உயர்த்திக் கொள்கிறார்கள். சீதனமானது பெண்களின் மேல்நோக்கிய சமூக அசைவுக்கு ஆதாரமாக இருக்கிறது.

சொத்துடமையற்ற நடுத்தர வர்க்கம் மத்தியில் சீதனம் ஒரு பெரிய பிரச்சினையாக தோற்றம் கொண்டிருக்கிறது. இதற்கும் பெண்களேகாரணம் எனச் சொல்லலாம். ஏனென்றால், இந்த வர்க்கப் பிரிவைச் சார்ந்த பெண்கள் தமது சமூக அந்தஸ்தைப் பேணுவதற்காக நல்ல மாப்பிள்ளைகளைப் பார்த்து காத்துக்கிடக்கிறார்கள். சொத்துடமை இல்லாததால், தமது சாதி, அந்தஸ்திற்கு ஏற்ப வரன் இவர்களுக்கு கிட்டுவதில்லை. ஆயினும் அத்தகைய மணமகனை திருமணம் செய்ய வேண்டுமென்ற பிடிவாதத்தில் இவர்கள் தாம்பத்திய உறவை அடைய முடியாது காத்துக் கிடக்கிறார்கள்.

இது இப்பெண்களின் தனிப்பட்ட அகம்பாவப் பிரச்சினையன்றி சமூகப் பிரச்சினை அல்ல. இதனால் இவ்வர்க்கப் பிரிவைச் சார்ந்த பெற்றோர்கள். அதிலும் குறிப்பாகக் குடும்பத் தலைவர்களான ஆண்களே பெரும்பாதிப்பிற்கு ஆளாகி இருக்கிறார்கள். இது ஒரு தந்தைக்கு மட்டுமன்றி பெண்களோடு பிறந்த ஆண் சகோதரர்களுக்கும் பெரிய பளுவைச் சுமத்தி விடுகிறது. ஒட்டுமொத்தத்தில் தந்தையும், தனயர்களுமாகச் சேர்ந்து சீதனம் சேர்ப்பதற்குக் கடுமையாக வியர்வை சிந்தி உழைக்க வேண்டியிருக்கிறது. எண்ணற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஆண் சகோதரர்கள் தமது பெண் சகோதரிகளைக் 'கரை சேர்ப்பதற்குக்' கடல் கடந்து சென்று வெளிநாடுகளில் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகிறார்கள் இதுதான் இன்றைய யதார்த்த நிலைமை.

சீதனப் பிரச்சினை என்பது வெறும் சொத்துடமைப் பரிமாற்றம் அல்ல. இதில் சொத்துடமை மட்டுமன்றி சாதி, வர்க்கம், சமூக அந்தஸ்து என்ற பல சிக்கலான அம்சங்களும் பின்னிப் பிணைந்து கிடக்கிறது சீதனப் பிரச்சினையை ஆணாதிக்கத்திலிருந்து பிறக்கும் பெண் ஒடுக்குமுறை வடிவம் என மேலெழுந்தவாரியாகச் சித்திரித்துக் காட்டுவதும் தவறானதென்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் இங்கு பெண்ணாதிக்கம் தான் தலைவிரித்தாடுகிறது. இது ஆண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினை எனச் சொல்லலாம்.

இந்த சீதனமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. இதனால் நன்மை பெறுவதும் நிம்மதி அடைவதும் ஆண்களாகத்தான் இருக்க முடியும்.

இந்த சீதனமுறையை சட்ட மூலமாக ஒழித்துக்கட்டுவது கடினமானது என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் இப் பிரச்சினை பேச்சுத் திருமணத்துடன் சம்பந்தப்பட்டது. பேச்சுத் திருமணங்களை நிறுத்தி, காதல் திருமணங்களை ஊக்குவித்தால் இப் பிரச்சினை காலப்போக்கில் தானாகவே ஒழிந்துவிடக் கூடும். எனினும் இப் பிரச்சினை தீருவதற்கு பெண்களின் மனநிலையில் ஒரு பெரியமாற்றம் ஏற்பட வேண்டும். பெண்கள் மத்தியில் இருந்துதான் இப் பிரச்சினை தோற்றம் கொள்கிறது என்ற விழிப்புணர்வு முதலில் பெண்களுக்கு ஏற்பட வேண்டும்.

க. தணிகாசலம்
மானிப்பாய்

# இரத்ததானமும் அது பற்றிய அச்சங்களும்
## ஓர் மீள் ஆய்வு

இரத்தம் ஆறாகிப் பெருகி மண்ணினைச் சிவந்திடச் செய்யும் ஒரு போர்க் காலத்தில் வாழும் எமக்கு, வைத்திய வசதிகளை மிகுந்த இடர்களுக்கு மத்தியிலும் அளித்து வருகின்ற யாழ். வைத்தியசாலையின் இரத்த வங்கி மட்டும் அடிக்கடி கோடைக்கால வல்லைவெளியைப் போல் வற்றி விடுகின்ற துரதிர்ஷ்டமான நிலையையிட்டுஇங்குபணிபுரியும் வைத்திய நிபுணர்கள் தமது மன விசாரத்தை மிக வெளிப்படையாகவே வெளிப்படுத்தியமையை அண்மையில் கைலாசபதி கலையரங்கில் நிகழ்ந்த இரத்ததானம் பற்றிய கருத்தரங்கொன்றிற்கு வந்திருந்த அனைவராலும் உணர்ந்து கொள்ளக் கூடியதாய் இருந்திருக்கும்.

சாதாரணமாகவே வைத்தியசாலையொன்றின் இரத்த வங்கி தனது வாடிக்கையாளரின் - நோயாளரின் - நலன் கருதி இரத்தத்தை எப்போதும் இருப்பில் வைத்திருப்பது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் வைத்தியர்கள் ஒரு நோயாளிக்கு இரத்தமேற்ற வேண்டும் எனக்கூறினால் அதன்பொருள் அந்தநோயாளி இரத்தம் ஏற்றினால் மட்டும் தான் பிழைத்திருப்பான் என்பதாகும் எனவே திடீரென எந்த வேளையிலும் இரத்த வங்கியின் தொலைபேசி கிணுகிணுப்பது அதிசயமானதொன்றல்ல ஒரு விபத்தைத் தொடர்ந்தோ அல்லது குழந்தைப் பேற்றுக்கு பின்னான குருதிப் பெருக்கினாலோ ஒருவனுக்கோ ஒருத்திக்கோ அவர்களின் உயிரைக் காப்பாற்றும் இறுதி மருந்தாக எங்களிடம் இருந்து பெறப்படுகின்ற அந்த450 மி. லீற்.இரத்தம் இரத்தவங்கியினால்வைத்தியருக்கு அளிக்கப் பட்டுஅந்நோயாளி பிழைப்பதற்கானஇறுதிப் போராட்டத்தை வைத்தியர் மேற்கொள்ள

கி. சிவஞானம்

உதவிக்கொண்டிருக்கும் இரத்த வங்கியின் இருப்பில் சாதாரணமாகவே தளம்பல் நிலை தவிர்க்கப்பட வேண்டியதாகும்

ஆனால் சமகால நிகழ்வுகளினால் இரத்த தானம் தவிர்க்கமுடியாதபடி எங்கள் ஒவ்வொருவருக்குமுரிய அடிப்படை சுகாதாரக் கடமைகளில் ஒன்றாகி வருவதை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும். இரத்தம் தேவைப்படுவோரின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிக வீச்சாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஒரு போர்க்காலத்தின் முன் எதிர்பார்ப்பு விளைவுகளில் ஒன்றான காயப்படுதலும் அதனால் உண்டாகும் இரத்த இழப்பும் - அதை ஈடுசெய்வதற்கான இரத்தம் என்பவற்றை விடவும் தற்போது இரத்தத்தின் தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக வைத்திய உதவிநாடிவைத்தியசாலைக்கு வந்து கொண்டிருக்கின்ற குருதிச் சோகையால் பாதிக்கப்பட்ட வயோதிபர்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாரும் சிறுவர்கள் போன்றோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கின்றதை குறிப்பிட்டுக் கூறலாம். போதிய போசாக்கின்மையால் வரக்கூடிய இந்நோய் கடுமை

[4ஆம் பக்கம் பார்க்க]

# லலித் அத்துலத் முதலி நரகத்திற்குச் சென்றிருப்பாரா?

வரலாறு எமக்குக் கற்பிக்கின்றது.
மனிதன் வரலாற்றிலிருந்து எதையுமே கற்கவில்லை
என்று.

—ஹெகல்

❋ ❋ ❋

என்னிடமிருந்து விலகிச்சென்றவர்கள்
நரகத்திற்குத்தான் செல்வார்கள்.

—ஜனாதிபதி பிரேமதாஸ

❋ ❋ ❋

நிலாந்தன்

லலித் அத்துலக் முதலியின் பல்கலைக்கழகநண்பர் டேவிற் செல்போர்ண் 83 யூலைக் கலவரத்தின் பின் கொழும்பு வந்திருந்தார். அப்பொழுது லலித் ஜெயவர்த்தன அரசின் தேசிய பாதுகாப்பு மந்திரியாக இருந்தார் செல்போர்ண் லலித்துடனான சந்திப்பின் போது அவரிடம் கேட்டார்: ''தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன?'' லலித்திடமிருந்து எத்தகைய தயக்கங்களுமின்றி உடனடியாகவேபதில் வந்தது: 'தமிழர்களின் மண்டைகளை உடைப்பது''.

அவர் நம்பிய, நியாயப்படுத்திய, தலைமை தாங்கிய ஒரு அரசியல்-மண்டைகளை உடைக்கும் அரசியல்-இறுதியாக அவரையே பலியெடுத்துவிட்டது.

கிருலப்பனயில் திரண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவர் சுடப்பட்டார். அப்பொழுது கொழும்பில் மழை கடுமையாகப் பெய்துகொண்டிருந்தது.

அவரது நெஞ்சைப் பிளந்து சென்ற குண்டுகளிற்கு இதுவரை, யாரும் உரிமை கோரவில்லை. சிங்களவர்களின் அரசியல் ஒரு உரிமைகோரப்படாத கொலைகளின் அரசியலாக எப்பொழுதோ மாறிவிட்டது.

இனி, 'சண்டே ஒப்சேவ'ரில், ''சிலுமின''வில் கார்ட்டூனிஸ்ற் ஒபயாதாவின் மூர்க்கத்தனமான தாக்குதல்களிலிருந்து அவருக்கு நிரந்தரமாக விடுதலை.

தயான் ஜெயதிலகவின்கீழ்த்தரமான விமர்சனங்களிலிருந்தும் நிரந்தரமாக விடுதலை.

ஒரு சட்டவல்லுனராக இலங்கைக்கு வெளியில், சிங்கப்பூர், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பிரகாசித்துக்கொண்டிருந்த லலித்தை ஜெயவர்த்தன 84 மார்ச்சில் மண்டைகளை உடைக்கும் ஒரு பாதுகாப்பு மந்திரியாக உருவாக்கினார். அதற்கு முன்னரும் பின்னரும் லலித். தனக்குத் தரப்பட்ட அமைச்சுக்களில், அவர் அறிமுகப்படுத்திய புதிய திட்டங்களில் - மகாபொலவிலிருந்து தொலைக்கல்வி முறைபோன்றவை வரை-தனது நிபுணத்துவத்தை நிரூபித்துக்காட்டினார். பாதுகாப்பு அமைச்சைத்தவிர ஏனைய பிற அமைச்சுக்களில் உலகின் நவீன போக்குகளுடன்சேர்ந்து விடத்துடிக்கும் அவரது சிந்தனைகள் அவரை நிறையத் திட்டங்களைத் தன் தலைக்குள் வைத்திருக்கும் ஒரு மந்திரியாக இனங்காட்டின. ஆனால் பாதுகாப்பமைச்சில் தான் அவரது நிபுணத்துவம் விரயமாகியது. ஈழப்போர் அவரை மிகவும் அவமானப்படுத்தியது. அது அவரது ஏனைய சாதனைகளையும் மங்கச் செய்தது.

விமர்சகர்கள் கூறுவதுபோல மூன்றாம் மண்டல நாடுகளின் மூளைசாலிகள் எப்படி, உள்நாட்டு யுத்தங்களில் தமது சக்தியை வீணடிக்கிறார்கள் என்பதற்கு, இலங்கைத் தீவில் லலித் ஒரு உதாரணம்.

தமிழர்கள் அவரை நினைவுகூருமபோது பீப்பாக் குண்டுகளையும் சேர்த்தே நினைவுகூர்கிறார்கள். சிங்களவர்களில் அவரது எதிரிகள் அவருடைய முதல் மனைவியின் விவகாரத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள். அவரை அவர்கள் ''அசிற் வீசுபவர்'' என்று கூறுவதுண்டு இந்தியர் ளில், எம்.ஜி. ஆரின் பொலிஸ் கொமிஷனர் மோகன்தாஸ் தனது, எம்.ஜி. ஆர்: மனிதனும் ஐதீகமும் (M.G.R: The Man and the Myth) என்ற நூலில் லலித்தை அத்துலக் முதலை என்றே குறிப்பிடுகிறார்.

ஒரு சம்பிரதாய பூர்வ இராணுவமாக சுதந்திர தினங்களில் ரவைகளற்ற ரைஃபிள்களோடு அணிவகுத்துச் சென்ற சிறிலங்கா இராணுவம் ஒரு போர் புரியும் இராணுவமாக மாறிய தருணத்தில் லலித், தேசிய பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவரது காலத்தில்தான் இராணுவம் நாட்டின் சகல வளங்களையும் உறிஞ்சியபடி வீங்க ஆரம்பித்தது இன்று இராணுவத்துள் காணப்படும் தளபதிகளும் இடைநிலைத்தளபதிகள் அநேகரும் முன்பு லலித்திற்கு சல்யூட்செய்தவர்கள்தான் சிங்கள அரசியல் வாதிகளில் இராணுவத்துள் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சிலருள் லலித் பிரதானமானவர். ஈழப்போரில் இராணுவம் வீங்கிச் சென்றபோது அதோடு சேர்ந்து அவரும் எழுச்சி பெற்றார். தனது குறுகிய 15 வருடகால அரசியல் வாழ்வில் சிங்களவர்களின் தேசியத் தலைவர்களுள் ஒருவராக அவர் உயர்ந்து சென்றதிற்கு ஈழப்போர் ஒரு முக்கிய காரணம்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையை அவர் கடுமையாக எதிர்த்தார். உடன்படிக்கை கைச்சாத்தாகிய வைபவங்களில் கலந்து கொள்ளாத முக்கிய மந்திரிகள் இருவருள் அவரும் ஒருவர் (மற்றவர் பிரேமதாஸ) உடன் படிக்கை உருவாகிய பின் புதிய பாராளுமன்றக் கட்டடத்துள் நிகழ்ந்த குண்டு வீச்சுச் சம்பவத்தில் லலித் படுகாயமடைந்தார். மரணத்தின் விளிம்பு வரை சென்றவரை தமிழரான ஒரு வைத்திய நிபுணர் காப்பாற்றினார். எனினும் கடந்தவாரம் அவர் கொல்லப்படும் வரை அகற்றப்படாத குண்டுச் சிதறல்கள் சில அவரது உடலின் ஆழத்துள் புதைந்து கிடந்தன. தான் எந்த விமான நிலையத்தைத் தாண்டிச் சென்றாலும் அங்கு மெற்றல் டிடெக்டர்கள் அல்லது அவற்றையொத்த கருவிகள் தன்னுள் மறைந்துகாணப்படும் உலோகச் சன்னங்களை இனங்காட்டி விடுகின்றன என்று அவர் ஒருமுறை சொன்னார்.

மேற்படி குண்டு வீச்சுச் சம்பவத்தை நினைவு கூர்ந்து பின்னர் அவர் எழுதிய கட்டுரையொன்று பின்வருமாறு முடிகிறது: 'வாழ்க்கையை எப்பொழுதுமே நாமாக இழந்துவிட முடியாது. அதை எம்மிடமிருந்து பறிக்க மட்டுமே முடியும்''.

இக்குண்டுத் தாக்குதல் அவரது வாழ்வில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்ததாக அஜித்சமரநாயக்க எழுதுகிறார். ஆனால், குண்டுச் சிதறல்களோடு வாழநேர்ந்த பிறகும்கூட லலித் ஈழப்போரில், மண்டைகளை உடைக்கும் அரசியலைத்தான் வற்புறுத்தி வந்தார். இந்தியர்கள் தலையிடாவிட்டால் அவர் ஒப்பரேஷன் லிபரேஷனில் வெற்றி பெற்றிருப்பார் என்பது இன்றும்பல சிங்கள விமர்சகர்களின் கணிப்பாயுள்ளது ஆனால், ஒப்பரேஷன் லிபரேஷன் தான் இந்தியர்களை தீவுக்குள் வரவழைத்தது என்பதை அவர்கள் மிக வசதியாக மறந்து விடுகிறார்கள்.

''சண்டே ரைம்ஸ்'' லலித்திற்கு அஞ்சலி செய்து எழுதிய அதன் ஆசிரியத் தலையங்கத்தில் சிறிலங்காவின் கலாசாரமானது ஒரு துப்பாக்கிக் கலாசாரமாக, வெடிகுண்டுக் கலாசாரமாக, இரும்பு முஸ்டிக் கலாசாரமாக ஆகிவிட்டது என்று விசனப்பட்டிருக்கிறது ஈழப்போரின் தவிர்க்க முடியாத தர்க்க பூர்வ வளர்ச்சிதான் இப்படி சிங்களவர்களின் அரசியலை இறுதி வெற்றியை துப்பாக்கிக் குண்டுகளால் நிச்சயப்படுத்த முயலும் ஒரு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ஈழப்போரின் தர்க்க பூர்வ விளைவு தமிழர்களை மட்டும் அல்ல சிங்களவர்களையும்தான் இராணுவமயப்படுத்தியிருக்கிறது.

தமிழர்களின் மண்டைகளை உடைப்பதில் தொடங்கியது அதன் வளர்ச்சிக் கட்டத்தில் சிங்களவர்களினதும் மண்டைகளை உடைப்பதில் போய் முடிந்திருக்கிறது

ஈழப்போரில் கடந்த இரு தசாப்த காலங்களிலும் கொல்லப்பட்ட தமிழர்களின் மொத்தத் தொகையையும் விட அதிக தொகை சிங்களவர்கள் (சுமார் 60 000 பேர்) அதுவும் குறுகிய இரண்டு வருட கால எல்லைக்குள் சிங்களவர்களாலேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து ஈழப்போரின் தர்க்கபூர்வ வளர்ச்சி சிங்களவர்களை எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது என்பது தெரியவரும்.

விக்டர் ஐவன் கூறுவது போல திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை ஜெயவர்த்தன பறித்த போது அதில் லலித்தும் உடந்தையாயிருந்தார். பின்னர் ஜெயவர்த்தன தேர்தல் வழிமுறைகளிற் கூடாகவே தன்னை ஒரு டிகோல் பாணியிலான நெப்போடிஸ்ற் ஆக உருவாக்கியபோது லலித் அதில் சேர்ந்திருந்து லாபமடைந்தார். தவிர்க்க முடியாதபடி ஜெயவர்த்தன அரசின் கூர்ப்படைந்த வடிவமாக பிரேமதாஸ எழுச்சி பெற்ற போது தான் அவரால் சகித்துக் கொள்ள முடியாதுபோயிற்று

சிங்களவர்களின் அரசியலை இருமுனைப் போட்டியிலிருந்து மும்முனைப் போட்டிக்கு மாற்றக்கூடிய வீரியம் மிக்க மாற்றுத் தலைவராக உருவாகி வந்த லலித், முன்பு பாதுகாப்பு மந்திரியாக இருந்த காலத்தில் தனது படையாட்களின் மனித உரிமை மீறல்களைப் பற்றி அவர்கள் மத்தியில் கதைக்கும் போது ''தேங்காய்களைக் களவாகப் பிடுங்கத்தான் வேண்டும். ஆனால் பிடிபடாமல் பிடுங்க வேண்டும்'' என்று கூறினார். கிருலப்பனயில் அவரைக் கொன்றவர்களும் அப்படித்தான் செய்திருக்கிறார்கள்.

சில லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் அரசியலைப் போல, சில தென்கிழக்காசிய நாடுகளின் அரசியலைப் போல, சிறிலங்காவின் அரசியலும் இன்று ஒரு மரணப்படை அரசியலாக (Death Squad Politics) மாறியிருக்கிறது அல்லது முன்சொன்ன சண்டே ரைம்சின் ஆசிரிய தலையங்கம் கூறுவதுபோல அரசியல் குற்றமயப்பட்டுவிட்டது (Criminalisation of Politics) இதில் முன்பு பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரியாக இருந்த ஜெனரல் ஷியா உல் ஹக் ஒரு முறை கூறியது போல: ''எவ்வளவுக் கெவ்வளவு உயர உயரப் போகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு வீழ்ச்சியும் உண்டு. அரசியலில் இன்றியமையாத நபர் என்று எவருமேயில்லை.''

## இரத்ததானம்

யாக இருந்தால் அந்நோயாளிக்கு இரத்தம் ஏற்றுவதன் மூலம் அவரை ஆரோக்கிய நிலைக்கு மாற்றுவது வைத்தியர்களின் தவிர்க்க முடியாத அடிப்படை வைத்திய முறைகளில் ஒன்றென்றே கூறலாம். தற்போதைய பொருளாதாரத் தடையும் இடப்பெயர்வும் சுய வாழ்க்கைப் பிறழ்ச்சியை உண்டுபணியிருப்பதால் எமது சமூகத்தில் ஒரு போசாக்கு எமது குறைபாட்டு நிலையை தோற்றுவித்துக் கொண்டிருப்பதை பலரும் உணரத்தலைப்பட்டு வரும் இவ்வேளையில் அதன் விளைவான குருதிச் சோகை, எல்லோரும் எதிர்பார்ப்பதைப் போல வைத்தியசாலையின் அறுவைச்சிகிச்சைப் பிரிவில் மட்டுமல்லாது மற்றும் மருத்துவ மகப்பேற்றியல் துறைகளிலும் இரத்தத்தின் தேவையை பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளமை வெளிப்படையானதாகும். இதனாலேயே இரத்த வங்கியால் வெளிவிடப்படும் நாளாந்த விநியோக அளவு அதன் உச்ச எதிர்பார்ப்புகளையும் விட மிக மிக அதிகரித்து வருகின்றது.

இரத்தத்தை வைப்பிலிட்டு தேவைப்படும் போது விநியோகிக்கும் செயன்முறையைக் கொண்டுள்ள இரத்த வங்கியும், தேவையான போது பணத்தை விநியோகம் செய்யும் மற்ற வங்கிகளைப் போன்றதுதான். ஆனால் இரத்தமும பணமும் தத்தம் செயற்றிறனில் பெரும் வேறுபாட்டைக் காட்டுகின்றன. இரத்தம் ஒரு உயிரை காப்பாற்றும் பெரும் பணி செய்கிறது. பணமோ அவ்வாறில்ல. இரத்தம் எங்களுடலில் என்ன செய்கிறது? அது ஏன் இவ்வளவு முக்கியமானதாக கருதப்படுகிறது? இவற்றிற்கு விடைகாண நாம் இரத்தம் என்றால் என்ன என்பதை கவனத்திலெடுக்க வேண்டும். 40 லீற்றரிற்கும் மேலான திரவத்தைக் கொண்டுள்ள எமது உடலில் இரத்தம் 5 லீற்றர்களாகும். [5000 மி லீற்றர்] (பெண்களில் சற்றுக்குறைவு) இது மூடியடைக்கப்பட்ட குழாய்களினூடு இதயப் பம்பியால் சுற்றியோடச் செய்யப்பட்டுக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே! இரத்தத்தில் திண்மகூறுகள், திரவக்கூறுகள் என இரு வேறுபட்ட பௌதிக கூறுகள் காணப்படுகின்றன. இதில் திண்ம கூறுகளில் உயிர்க்கலங்களும் புரதங்களும் அடங்கும். திரவக் கூறுகள் திரவப்பாயிழையம் (Plnma) எனக்கூறப்படுகிறது உயிர்க்கலங்களுள் செங்குருதிச் சிறுதுணிக்கை இரத்தத்தின் நிறத்திற்கு காரணமான ஈமோகுளோபினைக் கொண்டிருக்கின்றது. இது ஆரோக்கியமான ஆணில் 13.5mg/100ml. என்ற அளவாக இருக்கும் (பெண்களில் 12.5-mg/100ml) ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இந்த ஈமோகுளோபினின் அளவு குறைந்தால் அது குருதிச்சோகை எனப்படும். இந்த ஈமோகுளோபின் இரும்பாலும் வேறு சிலவகைப் புரதங்களாலும் ஆக்கப்பட்டுள்ளன. உண்மையில் இரத்தத்தின் நிறம் ஈமோகுளோபீனுடன் சேர்ந்திணைந்துள்ள ஒட்சிசனின் ($O_2$) செறிவினால் (சிவப்பு) அல்லது கரியமிலவாயு ($CO_2$)]வின் [வெளிர் நீலம்] செறிவினால் தீர்மானிக்கப்படுகிறது.

(மிகுதி அடுத்தவாரம்)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
95 பிரிவு - 2
கலை, வர்த்தக வகுப்புக்கள்
புதிய பிரிவு: 02. 05. 93
காலை 9.00 மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. S K. பிரபாகரன்
அளவையியல் — திரு. விக்கி
தமிழ் — திரு. குழந்தை
இந்து நாகரிகம் ) இந்து சமயம் ) — திரு. காரைசுந்தரம்பிள்ளை
புவியியல் — திரு. குணராஜா
அரசியல் — திரு. ஜெயகாந்தன்
வரலாறு — திரு. சிறீதரன்
95ஆம் ஆண்டுக்கு III பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(சி-6519)

# தீவக மக்களின் யாழ். புகையிரத நிலைய முகாம்

''பொதுவாக முகாம்களில் ஒரு வசதியும் இல்லை. இந்த 315 ரூபா நிவாரண உணவைத் தவிர வேறு எதுவும் கிடையாது. சட்டி, பெட்டி, வாளி, உடுப்பு எல்லாம் வந்த ஏத்தரவில் தான். அரச சார்பற்ற நிறுவனங்களை நிர்ப்பந்தித்துப் பணிகளைப் பெறமுடியாது.

**பேட்டி: மதன்**

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய தீவக இடம் பெயர்ந்தோர் முகாமின் சங்கத் தலைவி திருமதி கிறிஸ்ரி சாந்தினி. சமீபத்தில் முகாமில் அவரைச் சந்தித்த போது —

ஆரம்பத்தில் 1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து சரவணை, சுருவில், சின்னபடு ஆகிய கிராமங்களில் இருந்தோம். 1991 ஏப்ரல் 27ஆம் திகதி திரும்பவும் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து, ஐந்தாம் மாதம் 6ஆம் திகதி புகையிரத நிலைய முகாமுக்கு வந்தோம். தலைமுறை தலைமுறையாக ஊர்காவற்றுறை, சரவணை, மண்டை தீவு, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய கிராமங்களில் வாழ்ந்தவர்கள் புகையிரத நிலைய முகாமில் தங்கி வாழ்கிறார்கள் இங்கு இருப்பவர்கள் எல்லோருமே தொழிலாளர்கள். சீவல் தொழில், கடற்தொழில், தச்சுவேலை, மேசன் போன்ற தொழில்களைச் செய்தவர்கள். இங்கு வந்த பின் சிலர் சீவல் தொழில் செய்கிறார்கள். மற்றவர்கள் விறகு வியாபாரமும், வகுப்புத் தொழிலும் செய்கிறார்கள் - இப்படிக் கூறினார்.

டர்கள் இருந்தார்கள். இப்போது எங்களில் இரண்டு மூன்று பேர் பயிற்சி பெற்றுத் தொண்டர் சேவை செய்கிறார்கள். மருந்துகளைக் கொடுப்பது இவர்கள்தான்.

முகாமிலிருந்து சுமார் 250 பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள். இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் தீவகப் பாடசாலைகளில் படிக்கிறார்கள். பெற்றோர் தங்கள் முயற்சியால் கொப்பி, பென்சில் வாங்க வேண்டும். பிள்ளைகள் இரவில் படிப்பதற்கு இடவசதியில்லை, கட்டடத்தில் குடும்பங்கள் நெருங்கி வாழ்வதால் இந்த நிலை. வெளிச்சமும் இல்லை. பொதுவான ஒரு மண்டபம் இருந்தால் படிப்பது சுலபம். முதலில் ஒரு பெட்ரோல் மக்ஸ் இருந்தது. அந்த வெளிச்சத்தில் பிள்ளைகள் படித்தார்கள். மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் அந்த வசதியும் இல்லை. அத்துடன் பெட்ரோல் மக்ஸ்சும் பழுதடைந்து விட்டது. பெட்ரோல் மக்ஸ் கேட்டால், இப்போது இந்த முகாமில் குடிசைகளை அமைக்கும் வேலையை ஆரம்பித்துவிளோம். பிறகு பெட்ரோல் மக்ஸ் தரலாம் என்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். முகாமில் பாலர் பாடசாலை ஒன்றுஇயங்கிக்கொண்டிருக்கிறது. பிள்ளைகள் நிலத்தில்தான் இருந்து படிக்கிறார்கள். ஆசிரியர்கள் கால் ஆறுவதற்குக் கூடக் கதிரை இல்லை.

''முகாமில் உள்ளவர்கள் மூலதனம் இல்லாமல் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். கடைகளில் நின்று உழைத்துக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அநியாயம். ஐந்நூறு ரூபா உழைக்க முடியுமென்றால் மூலதனம் போட்டால் ஏன் ஆயிரம் ரூபா உழைக்க முடியாது?''

தீவகப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் பலர் வீடுகளில் இருக்கிறார்கள் இரண்டு வருடங்களாக நீங்கள் ஏன் முகாமில் வாழ வேண்டும்? என்று கேட்ட போது —

அவர் தயங்கியபடி அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர் இருக்கிறார்கள். பற்றது காசு பண வசதியும் அவர்களிடம் இருந்திருக்கும். அப்படியான வசதிகளால், அந்த நெருக்கடியான நேரத்தில் பணம் கொடுத்து வீடு வாடகைக்கு எடுக்கக் கூடியதாக இருக்கின்றது. புகையிரத நிலைய முகாமில் வாழும் மக்களுக்கு அந்த வாய்ப்புகள் இல்லை வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதால் வாடகை கொடுத்து வீடுகளில் இருக்கிற நிலை இல்லை. அதனால் முகாமில் வாழவேண்டியதாயிற்று.

இரண்டு வருடங்கள். புகையிர நிலைய இடம் பெயர்ந்தோர் முகாமின் சுகாதாரம், நிவாரண உதவி மற்றும் கல்வி போன்ற வித விதமான அடிப்படை வசதிகள் பற்றி அவர் சொன்னார்.

முகாமில் 149 குடும்பங்கள் உள்ளன. மொத்தமாக 565 பேர் வாழ்கிறார்கள். சுகாதாரத்தை யாழ் மாநகர சபை மேற்பார்வை செய்கிறது. முகாமின் நிர்வாகம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கையில். இந்த முகாமில் வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் இல்லை. இந்த முறைதான் 'அம்மாள் வருத்தம்' (கொப்பளிப்பான்) பரவலாக நடக்கிறது. தினமும் சுகாதார பரிசோதகர் வருகிறார். முன்பு தொண்

இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் என்னும் ஒரு அமைப்புசெயற்படுகிறது. பத்து ரூபா கொடுத்து உறுப்பினர்களாகச் சேர்ந்த குடும்பங்களில் சாவீடு அல்லது பிரசவம் நடந்தால் நிதி உதவி தரப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்கம் பெரிசான பிள்ளைகளுக்கு உணவுப் பொருள்கள் கொடுத்து உதவியது. இப்போது அந்தக் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் கிணறு இறைத்தல், கிணறுகளுக்கு வேலி மறைப்பாகப் போடுதல் போன்ற பணிகளுக்கு எமக்கு உதவி வருகிறது. சங்கத்தின் செயலாளர் குணசீலன் எம்முடன் கூட நின்று உதவிகள் செய்வது வழக்கம்,

இப்போதுதான் எமது முகாமில் உற்பத்திக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுயதொழிலுக்குக் கடன் வழங்கவும் உத்தேசித்துள்ளோம்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஏதாவது உதவி கிடைக்கின்றதா?

உண்மையை மறைக்கக் கூடாது. மற்ற முகாம்களுடன் ஒப்பிட்டுத்தான் கதைக்கிறேன். சிறுவர் பாதுகாப்பு நிதியம்தான் எமது முகாமைப் பொறுப் பேற்றுள்ளது. பாத்திரங்கள் தட்டுப்பாடான நேரத்தில் பாத்திரங்கள் தந்தார்கள். மாதத்தில் இரண்டு அல்லது ஒரு தடவை ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் ஜீவகாரம் வழங்கப்படுகிறது. சவர்க்காரம், மண்ணெண்ணெய் தட்டுப்பாடான நேரங்களில் அவற்றைத் தந்து உதவுகிறார்கள். மழைக் காலத்தில் படுப்பதற்கு றப்பர் சீற் உதவியுள்ளார்கள். கட்டடத்தின் ஒவ்வொரு பகுதியும் நான்கு ஐந்து குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த நெரிசலைக் குறைப்பதற்கு குடிசைகளை அமைக்கும் பணியில் நிதியம் இறங்கியுள்ளது.

அடுத்தாற்போல்யாழ்ப்பாணம் புகையிரத நிலைய தீவக இடம்பெயர்ந்தோர் முகாமின் சங்கச் செயலர் அகஸ்தின் விஜயன் பின்வருமாறு கூறுகிறார்;

முகாமில் உள்ளவர்கள் மூலதனம் இல்லாமல் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலையில்உள்ளார்கள் கடைகளில் நின்று உழைத்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அநியாயம் 500 ரூபா உழைக்க முடியும் என்றால் மூலதனம் போட்டால் ஏன் 1000ரூபா உழைக்க முடியாது? மற்றும்படி வளங்கள் கிடைக்குமானால் தொடர்ந்தும் தொழில் செய்து கொண்டிருக்கலாம். தோட்ட வேலை செய்யக் கூடியவர்கள் முகாமில் இருக்கிறார்கள். எல்லா விதத்திலும் நொந்து போய் உள்ளார்கள். தோட்டக் காணிகள் இருந்தால் தோட்டம்செய்யலாம். கதைத்துப்பேசி வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு எந்த நிறுவனமும் முன் வருவதாக இல்லை என்னசெய்வது? சிறுவர் பாதுகாப்பு நிதியமும் ஒரு திட்டத்துக்கு அமையத்தான் நன்கொடையும், உதவியும் செய்கிறது.

மேலும் அவர், இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்திற்கும் எங்களுக்கும் தொடர்புகுறைவு அங்கத்துவ பணம் கட்டினவர்களுக்கு சாவீடு. பிரசவம் போன்ற வேளைகளில் உதவுவார்கள். தாமாகவே முன் வந்து மலசல கூடங்களுக்கு மறைப்புப் போடுதல். கிணறு இறைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள். தாங்களாகவே கிடுகு கொண்டு வந்து போடுவார்கள். அவர்களோடு சேர்ந்துநாமும்அடைப்போம்.

எங்களில் பலருக்குத் தொழில் இல்லை. கூலி வேலை செய்தவர்களுக்கு முற்றாக வேலை இல்லை, கிளாலிக்குப் போய்விறகுவெட்டிஉழைக்கக் கூட சைக்கிள் வாங்கப் பணம் இல்லை. இந்தநிலையும் இருக்கிறது மற்றும்படி, வழங்கப்படும் நிவாரணம்போதாது ஐந்து பேருக்கும் அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 315 ரூபா நிவாரணம் தரப்படுகிறது. சில குடும்பங்களில் 8, 9, 10 பேர் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிவாரணம் எந்த மூலைக்கு? பருப்பும், பச்சை அரிசியும் தான் நிவாரணத்துக்குத் தரப்படுகிறது. போஷாக்குள்ள உணவும் கிடையாது. 5 உறுப்பினருக்கு மேற்பட்ட குடும்பங்கள் சுமார் 60 முகாமில் உள்ளன. எங்களுக்கு மாதத்தில் நான்கு கட்ட நிவாரணம் கிடைக்கிறது.

எங்கள்உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் வசதியான நிலையில் இல்லை. அவர்கள் குடிசைகளில் வாழ்வதால் மற்றவர்போல் மாமன், மச்சான் என்று அவர்களிடம் போக முடியாமல் முகாமே தஞ்சமென்று வாழ்கிறோம். இவ்வாறு தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழக தலைவர் வல்லிபுரம்ஐயாத்துரையை அத்தியடியில் அவர் அலுவலகத்தில் சந்தித்தோம் யாழ்ப்பாணம்புகையிரத நிலைய தீவக இடம் பெயர்ந்தோர் முகாம்பற்றி அவர்விவரங்கள்தருப்போது வியப்பாகத் தான் இருக்கிறது.

பொதுவாக முகாம்களில் ஒரு வசதியும் இல்லை, இந்த 315ரூபா நிவாரண உணவைத் தவிர வேறு எதுவும் கிடையாது. சட்டி, பானை, வாளி, உடுப்பு எல்லாம் வந்த ஏத்தரவில்தான். அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களை நிர்ப்பந்தித்துப் பணிகளைப் பெற முடியாது கிடைக்கிற வசதிகளைக் கொண்டு தான் உதவுகிறார்கள். சமூகத்தில் அதி உயர்ந்த ஆட்கள் - புத்திஜீவிகள் கூட உணருகிறார்களில்லை. ஏதோ விழா என்றால் ஆயிரம் லட்சக் கணக்கில் கூடுகிறார்கள். முகாம் பக்கம் தலை வைத்தும் பார்க்கிறார்களில்லை.

புகையிரத நிலையமுகாமுக்கு உங்கள் அமைப்பு எந்தவகையில் உதவுகிறது?

புகையிரத நிலைய முகாமில் உள்ளவர்களுக்குமரணம், பிரசவம், கல்வி, வைத்தியம் போன்ற விஷயங்களில் உதவி வருகிறோம். 1992 ஜூன் முதல் இன்று வரை 8 மரணச் சடங்குகளுக்குத் தலா 1000 ரூபாய்ப்படியும், இரண்டு பிரசவங்களுக்குத்தலா 500ரூபாப் படியும் உதவியுள்ளோம். உதவி தேடி எம்மை நாடி முகாமில் இருந்து வந்தவர்களுக்கு உதவி வழங்கியிருக்கிறோம். எமது அமைப்பு ஒரு வெகுஜனப் போராட்ட அமைப்பு. அரச திணைக்களங்கள் என்னென்ன வகையிலே மக்களுக்கு முகம் கொடுக்காமல் ஒதுங்கி இருக்கின்றனவோ அதைஎல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அந்தக் கடமைகளைச் செய்யும்படி கேட்கிறோம்.

சுயசார்புத் தொழிலுக்கு உங்கள் அமைப்பு ஏதாவது உதவி வழங்கியுள்ளதா?

சுயதொழில் இப்போது செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை. சுயதொழில் வாய்ப்பு என்பது எல்லாம் இப்போது இல்லை. எல்லம் போலித்தனமானது. சீவல் தொழில் செய்யினம்தான். ஆனால் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை.

## நடப்பு நொடிக்கதை

சேவல் கூவியது.

'நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது'...என்று கதிரவன் பூரித்துப் போனான்.

மாலை வந்தது.

கதிரவன் மேற்குத் திசையின் மூலையில் கவிழ்ந்தான். சாயும்போது—

'நான் விழுகிறேனே என்னைத் தாங்க யாருமே வரமாட்டார்களா' என்று ஏங்கினான்.

சேவலை அவன் எதிர்பார்த்தான்.

வரவில்லை.

விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான் :—

'எழும்போது தாங்க வருகிறவனெல்லாம் விழும்போது தாங்க வருவதில்லை.'

நன்றி:
காசிஆனந்தனின் கதைகள்.


பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
[BECON]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95 கலை வர்த்தகம்

புதிய பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | — வரதராஜன் |
| கணக்கியல் | — சௌந்தி |
| வர்த்தகம் | — பசில் |
| அளவையியல் | — S. S. மனோகரன் |
| தமிழ் | — மீரா |
| இந்துநாகரிகம் | — பாலா |
| அரசியல் | — பஞ்சாட்சரம் |
| புவியியல் | — ஜோசப் |

ஆரம்பம்:- 2- 5- 93

8.00 A.M.

[சி-6507)

சிறுகதை

# பருந்தின் பசி

மாலைக் கதிரவன் வான்வெளியில் மங்கிக் கொண்டிருந்த வேளை, முகிற் கூட்டங்கள் பஞ்சுப் பொதிகளாக வானத்தில் பவனிவர, கதிரவனும் மெல்ல மெல்ல ஊர்ந்து போய்க்கொண்டிருந்தான்.

மாங்கூடலின் நடுவே, ஈஸிசேரில் சயனித்திருந்த வேலாயுதத்தார் வெற்றிக்களிப்போடு சிந்தனைகளை அசைபோட்டுக் கொண்டிருந்தார்.

கீச்! கீச்! என்ற சத்தம் அவரது சிந்தனையைக் குலைத்தது. திரும்பிப் பார்த்தார். பக்கத்து வீட்டுக் கோழி, குஞ்சுகளுடன் குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது. தாய்க்கோழி குப்பையைக் கிளறி புழுக்களைப் பொறுக்கியது. பின்னர் கொக்! கொக்! என்று கரகரக்கக் குஞ்சுகள் ஓடி வந்தன. கோழி, இரையை வாயால் கொத்திப் பிய்த்துப்போட, குஞ்சுகளோ அவற்றைக் கொத்திக் கொத்தி உண்ண முயற்சித்தன. ஏதோ மேலே பறப்பது போல் நிழற்பட, கோழி கரகரத்தது. கொக்! கொக்! குஞ்சுகள் யாவும் தாயின் சிறகுக்குள் வந்து ஒதுங்கின.

மெய்மறந்து இதைப் பார்த்திருந்த வேலாயுதத்தாருக்குத் தானும் தனது ஒரே மகனைக் கோழி குஞ்சுகளைப பாதுகாப்பது போல் பாதுகாத்து வளர்ப்பது நினைவுக்கு வந்தது. ஆம்! அவரது ஒரே மகன்தான் நிமலன்.

நிமலனைப் பற்றிச் சுருங்கச் சொன்னால், படிப்பில் மிகுந்த கெட்டிக்காரன். போனால் பாடசாலை; வந்தால் வீடு. வேறு பொழுது போக்குகள் கிடையாது. கிடையாது என்று கூறுவது பிழை. வேலாயுதத்தார் அதற்கு இடம் வைக்கவில்லை. வெளியில் எங்கும் திரிய விடுவதில்லை. அவசியம் ஏற்பட்டால் தானும் கூடவே போய் வருவார். 'டியூசன் அது இது என்று வெளியிலை விட்டால், பொடியள் கண்டபடி திரிஞ்சு கெட்டுப் போவான்கள்'. இது வேலாயுதத்தாரின் வேதாந்தம். அதனால் அவரது மகன் தானேதான் படித்துப் பாஸ் பண்ணினான் என்றால் அதுவும் இல்லை. வீட்டிற்கே ஆசிரியர்களை அழைத்துப் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வைத்தார். நிமலனுக்கோ, 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்ற நிலைப்பாடு. எனவே, அப்பா செய்து கொடுத்த வசதிகளைப் பயன்படுத்தி, ஊக்கமாகப் படித்தான். ஏ/எல் பரீட்சையில் அதிவிசேட சித்திகள் நான்கு பாடங்களிலும் எடுத்தான்.

சுயநலமே உருவான வேலாயுதத்தாருக்குப் பெருமை பிடிபடவில்லை. தனது அலுவலக நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று எல்லோரையும் அழைத்து 'பார்ட்டி' ஒன்றையே வைத்துவிட்டார். வந்த விருந்தினர்கள் மகனைப் பாராட்டும் போது அது தனது முயற்சிக்கே கிடைத்த வெற்றியாக அகமகிழ்ந்தார்.

மகனது மருத்துவப் படிப்பிற்குக் கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தார். நிமலனும் சிறப்புச் சித்தி பெற்றிருந்தமையால் அனுமதி கிடைத்தது. 'இஞ்சை படிக்கிற தெண்டால் எத்தினை வருசம் செல்லுமோ தெரியயில்லை. அங்கையெண்டால் அஞ்சு வருசத்திலை தம்பி டொக்டரா வெளிக்கிட்டிடுவன். மேல சோதினையளும் எடுக்கலாம். நாலு பாஷையளும் பேசப் பழகிவிடுவான். இஞ்சை எந்தக் காலம் பிரச்சினை தீரப்போகுது. எந்த நேரமும் மடியிலை நெருப்பைக் கட்டினபடி தானே திரியிறம், வேலாயுதத்தார் வெளியில் சொல்லிக் கொண்டார். அத்துடன் தானும் மாற்றமெடுத்துக் கொண்டு கொழும்போடை குடும்பத்தையும் கூட்டிக் கொண்டு போய் விட வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டார்.

நேற்றுத்தான் நிமலனைத் தனது நண்பர் ஒருவருடன் கொழும்பிற்கு அனுப்பி வைத்திருந்தார். நண்பர் அடிக்கடி கொழும்பிற்குப் போய் வருகிறவர். போற வாற பாதையிலை உள்ளவை எல்லாரும் பழக்கம். அதனாற் தான் பாதுகாப்பை முன்னிட்டு மகனையும் அவரோடு அனுப்பி வைத்தவர்.

கொ...க்! கொ...க்!...

தாய்க் கோழியின் அவலமான குரல் கேட்டு நினைவுகளிலிருந்து மீண்டார். வேலாயுதத்தார். பருந்தொன்று வேகமாக இறங்கி, இலாவகமான இறாஞ்சல் பருந்தின் கால்களுக்குட் கோழிக்குஞ்சு. மீண்டும் வேகமான ஏற்றம். வானத்தில் பருந்து பறந்தது. கோழிக்குஞ்சு பருந்தின் கால்களுக்குள் இருந்து கொண்டு கீச்! கீச்!... எனக் கத்தும் ஒலி.

"டேய் பிராந்தடா" பக்கத்து வீட்டுக்காரரின் நேரம் பிந்திய கூச்சல். தாய்க் கோழியும் கோபத்துடன் செட்டையை அடித்துக் கூச்சலிட்டது. கரகரத்தபடி குஞ்சுகளைச் சிறகுக்குள்ளே காத்துக் கொண்டது. உடன் பிறப்பு ஒன்றை இழந்து ஏக்கத்துடன் குஞ்சுகள் சிறகுக்குள் அணைந்தன.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வேலாயுதத்தாரின் மனதிலும் பதற்றம். ஏனோ இந்த நிகழ்ச்சியின் பின் அவருக்கு மன நிலை சரியில்லை. தனது ஒரே மகன் சுகமே கொழும்பிற்குப் போய்ச் சேர்ந்திருப்பான் என்ற நம்பிக்கையுடன் படுக்கைக்குப் போனார்.

"இஞ்சாருங்கோ! இஞ்சசருங்கோ!"

மனைவி கமலம் பேப்பரும் கையுமாய் நின்றாள். கண்ணைக் கசக்கியடி திடுக்கிட்டு எழும்பியவர், "என்னப்பா?" என்று கேட்டார்.

"நேற்று இரவு கிளாலிக் கடலுக்குள்ளை போன வள்ளங்கள் மூன்றைக்காணவில்லையாம்; நேவிக்காரன்கள் கட்டி இழுத்துக் கொண்டு போனதாய்ப் போட்டிருக்கு. எனக்கு என்னமோ பயமாயிருக்கு."

"நீர் சும்மா பயப்பிடாதையும். நிமலனும் அந்தாளும் முந்தநாள் எல்லே போனவை. நான் வள்ளங்கள் வெளிக்கிட்டுப் போன பிறகு தானே வந்தநான். நாங்கள் கையெடுத்த முருகன் அப்பிடிக் கைவிட மாட்டான்."

மனைவியைத் தேற்றினாலும் வேலாயுதத்தாருக்கு நெஞ்சு பக்! பக்! என்று அடித்தது. எங்கு போய் விசாரிப்பது என்று புரியாமல் தவித்தார். அன்று நாள் முழுவதும் எங்கெல்லாமோ அலைந்தார். ஒரு தகவலும் கிடைக்கவில்லை

மறுநாட் பத்திரிகையில் 'புலோப்பளைக் கரையின் வெட்டுக் காயங்களுடன் மாணவரின் சடலம் கரை ஒதுங்கியது. அடையாளம் காணப்படவில்லை' என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**மலரன்னை**

வேலாயுதத்தார் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விட்டார். அவரது கண்கள் இருண்டன. யாரோ தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தார்கள். அழுகுரல்களின் மத்தியிலும் அவருக்கு அடுத்த வீட்டுக் கோழியின் அவலக் குரல் கேட்டது.

(யாவும் கற்பனை)

---

மேதினக் கவிதை

## புதிய வாழ்வை உறுதிப்படுத்து

தோழி!
உள்ளம் நைந்து,
உடலும் நொந்து,
உனக்குள்ளேயே
உடைந்து கொண்டு...
இன்னும்
எத்தனை காலம்
இந்த வேதனைகளை
ஜீரணித்துக் கொள்ள
உன்னிடம் வலுவிருக்கிறது
அடுத்த தலைமுறைக்கும்
இந்த
'பண்பாட்டை'
கையளித்து
அடிமைச் சாசனத்தை
நவீனப்படுத்த
உதவப்போகின்றாயா?
உன் பலம்
ஆவியாகு முன்பே
உரிமை கேட்டு
உன் குரலை
உயர்த்து
பார்வையின் ஒளி
மங்கு முன்பே
உன்னை இழிவு படுத்தும்
உன் வாழ்வைக் கருக்கும்
பொய்மைகளை
இனங்கண்டு அழிக்க
பூகம்பமாய் புறப்படு.
விடியும் தேசத்தில்
பெண்ணின்
புதிய வாழ்வை
உறுதிப்படுத்து.

—வருணி

## கின்னஸ் புத்தகம்

சாதனைகளைக் குறிப்பிட்டுச் சாதனை செய்யும் புத்தகமாகும். இது லண்டனில் பிரபல புத்தக தொழிலதிபர்களின் கூட்டத்தில் எது பெரியவை, எது சிறியவை, எது அதிசயிக்கத்தக்கவை என்று குறிப்பிடும் புத்தகத்தை வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது 1955ஆம் ஆண்டளவில் அச்சடிக்கப்பட்டு கேளிக்கை விடுதிகள், மதுபான சாலைகள், பாடசாலைகள் போன்றவற்றிற்கு இவர்கள் அனுப்பி வைத்தனர். ஆனால் அதிசயிக்கத்தக்க அளவில் இது விற்பனையாகியது. 'இப்படியொரு அருமையான புத்தகம்' என்று பலரால் கூறப்பட்டு அதிகமாக விற்பனையாகியது.

இப்பொழுது கின்னஸ் புத்தகம் பரிமாண வளர்ச்சி பெற்று மருத்துவம், பொறியியல், வானியல் போன்ற 26 வகையான புத்தகங்களாக வெளியிடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் இப்புத்தகம் புதிய புதிய சாதனைகளை அறிமுகப்படுத்தும். முதலில் வந்த சாதனைகள் முறியடிக்கப்படின் அது கின்னஸ் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். நீங்கள் ஒரு சாதனையைப் புரிந்தால் அது அளவிடக் கூடியதாக இருப்பின் அவற்றை ஒரு அரசாங்க அனுமதி பெற்ற உத்தியோகஸ்தர் மூலம் இது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் நின்று விடாமல் அரசு அதிபரின் மூலமும் உறுதிப்படுத்தி லண்டனில் இயங்கி வரும் கின்னஸ் புத்தக அமைப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும். அளவிட முடியாத சில சாதனைகளாக இருப்பின் வீடியோ மூலமோ, அல்லது புகைப்படத்தின் மூலமோ மேற் குறிப்பிட்டவாறு உறுதிப்படுத்த வேண்டும்.

லண்டனில் உள்ள பிக்கடிலி என்ற இடத்தில் கின்னஸ் புத்தக அருங்காட்சி அரங்கு ஒன்று உண்டு. இதில் சாதனைகள் புரிந்த புகைப் படங்கள் மற்றும் வீடியோப் படங்கள், எழுத்துருவில் இடம்பெற்ற அறிக்கைகள் போன்றன அங்கு உண்டு.

இப்புத்தகம் 26 மொழிகளில் வெளியிடப்படுகிறது. இந்தியாவில் இந்தி மொழியில் மட்டும் வெளியிடப்படுகிறது. தமிழில் வெளியிடுவதற்குக் கின்னஸ் அமைப்பு அனுமதி அளித்துள்ளது. இப்புத்தகம் விரைவில் தமிழில் வெளிவரும்.

அத்துடன் இக் கின்னஸ் சாதனைகள் கொம்பசறி டிஸ்க் (Composery Disk) வீடியோ நாடாக்களாக இது வெளிவருகிறது.

அனுப்பியவர்:
றொய்ஸ்
வசாவிளான் கிழக்கு,
வசாவிளான்.

---


## 1-ம் வருட நினைவஞ்சலி



வீரப் பிறப்பு
26 - 07 - 1975

வீரச்சாவு
30 - 04 - 1992

திதி
30 - 04 - 1993

**2-ம் லெப். கார்வண்ணன்**
(கனகலிங்கம் கர்ணதாஸ்)

தச்சன்காடு நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவெய்தியோருக்கும் எமது அஞ்சலிகள்.

2/1, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(4779)

# ருஷ்யா எங்கே போகிறது?

# சில திகைப்பூட்டும் உண்மைகள்

பாலகுமாரன்

ருஷ்யாவின் எதிர்காலத்தை தீர்மானிக்க நடாத்தப்பட்ட மக்கள் கருத்தறிவதற்கான வாக்கெடுப்பு நடந்து முடிந்துவிட்டது. யெல்ட்சினை ஆதரித்து 58 வீதமானோரும், அவரது பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கையை ஆதரித்து 52 வீதமானோரும் வாக்களித்தனர். ஆனால் யெல்ட்சின் எதிர்பார்த்தது போல, அவரது அதிகாரத்திலும் பொருளாதார மறுசீரமைப்புக்கு பெரும் தடையாகவிருக்கும் நாடாளுமன்றை கலைத்து புதிய தேர்தலை விரைவாக நடாத்த மக்கள் பூரண விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே மீண்டும் முன்னர்போல மோசமான இழுபறி நிலையே தொடரும் என நம்பப்படுகின்றது. இத்தேர்தல் முடிவுகள் எவ்வாறு வரும் என்பது குறித்து ருஷ்ய மக்கள் பெரிதும் பரபரப்பு அடையவில்லை. ஆனால் மேற்குலகமோ பெரிதும் பதற்றமடைந்து யெல்ட்சினுக்கு ஆதரவாக கோடிக்கணக்கான மில்லியன் டொலர்களை உதவியாக வழங்க முன்வந்தது. யெல்ட்சினே மிகச்சிறந்த சனநாயகவாதி, அவரை விட்டால் ருஷ்யாவுக்கு வேறு கதி இல்லை என்கிற பாணியில் பெரும் எடுப்பில் தத்தம் நாட்டு தொலைக்காட்சியில் மேற்குலக தலைவர்கள் தேர்தல் பரப்புரை செய்த விந்தையும் நடைபெற்றது. ருஷ்யாவோடு பிணக்குற்றிருந்த யப்பான், முன் உதவிசெய்ய தயங்கிய உலக வங்கி எல்லாமே உதவிசெய்ய ஓடோடி வந்தன. பில் கிளின்டனோ தனது முழு ஆதரவும் யெல்ட்சினுக்கே என பிரகடனம் செய்தார். ஆனால் இவ்வளவுசெய்தும் யெல்ட்சினின் பிரச்சினைகள் பூரணமாகதீர்ந்தபாடாக இல்லை. அவரை முழுமையாக காப்பாற்றுவது என்பது மேற்குலகிற்கு இலகுவாக இருக்கப்போவதில்லை.

1991 ஆகஸ்ட் சதிப்புரட்சியின் பின்னரும், 1991 டிசம்பரில் கோர்பச்சேவ் பதவி விலகிய காலகட்டங்களின் பின்னாலும் யெல்ட்சின் மிகுந்த உறுதியும் தன்னம்பிக்கையும் அதேசமயம் இறுமாப்பும் உள்ளவராகவே இருந்தார். கோர்பச்சேவ் பதவி விலகிய இறுதி நாளன்று அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''இனி நான் கோர்பச்சேவிடம் போகத் தேவையில்லை. இனி என்னிடம் கோர்பச்சேவ் வர வேண்டும். அதுவும் தனது ஓய்வூதியப் பணத்தை பெற'' எனக் கேலியாகக் கூறி கோர்பச்சேவை ஓட ஓட விரட்டினார். ஆனால் யெல்ட்சின் இன்றோ தளர்வுற்றவராக, நிச்சயமற்றவராக, குழம்பிப்போனவராகத் தென்படுகிறார். ''அடுத்த 10 நிமிடத்தில் அவர் என்ன செய்வார்? என்ன முடிவு எடுப்பார்? என்பது தெரியாத நிலையில் அவரோடு எவ்வாறு பணிபுரிய முடியும்?'' என்கிறார் அவரது முன்னாள் உதவியாளர் ஒருவர். அவரது நண்பர்களே இன்று அவரைக் கைவிட்டு வருகிறார்கள். இவ்வாறாக அவரது உதவி சனாதிபதி அலெக்சாண்டர் ருட்ஸ்கோயே இன்று அவரை எதிர்க்கிறார். 1990 ஆண்டளவில் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்காக இருந்தபோது தெரியப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் எனப்படும் நாடாளுமன்றமும், அதன் சபாநாயகர் ருஸ்லான் குஷ்புலட்டாவும் மிகக் கடுமையாக இவரது பொருளாதார சீர்திருத்தங்களையும், சனாதிபதிப் பதவிக்குரிய அதிகாரங்களையும் எதிர்க்கின்றனர். எதுவுமே செய்ய முடியாத இழுபறி நிலை இன்று ருஷ்யாவில் தோன்றி விட்டது. முழு ருஷ்ய நிருவாகமே செயலற்றுப் போயுள்ளது. இன்று நாடாளுமன்றம் ''பிற்போக்குவாதிகள், பழமைவாதிகளின் கோட்டை'' என யெல்ட்சின் கடுமையாகக் கண்டிக்கிறார். சனநாயகம் என்பதற்கு 'ரஷ்யாவில் பொருள் பழைய கம்யூனிஸ்ட்டுக்களை எதிர்ப்பது மட்டும்தான்' என ருஷ்ய சமூகவியலாளர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

இப்படியாகக் கடும் எதிர்ப்புக் கிளம்புவதற்கு ருஷ்யப் பொருளாதாரம் சநதைப் பொருளாதார முறையோடு இணைக்கப்பட்டபின் நுகர்வுப் பொருள்கள் விலைகள் பன்மடங்குஅதிகரிக்க மக்கள் வாழ்க்கைத் தரமோ கற்பனைசெய்ய முடியாத அளவிற்கு வீழ்ச்சியடைய இன்று ருஷ்யர் பலர் ஏழைகளாக, வறுமையில் வாடுபவராக மாறியதே பிரதான காரணம். இன்றுமக்கள் பாணுக்கும், வெண்ணெய்க்கும், இறைச்சிக்கும், முட்டைக்கும் ஆலாய்ப் பறக்கிறார்கள். பலர் வீடற்று வருமானம் அற்று மொஸ்கோவின் வீதியோரங்களில் அலைகின்றார்கள். சந்தைப் பொருளாதார முறையைப் புகுத்துவதில் ஏற்படும் இடர்கள் மக்களை பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன. இது வரை 60,000 தொழில் முயற்சிகள் (20வீதம்) மட்டுமே தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிராமப்புறங்களை தனியார் மயமாக்கல் சென்றடையவில்லை என்றும் கூறப்படுகின்றது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தனது தனியார் மயமாக்கல் திட்டத்தைபெரும் எடுப்பில் யெல்ட்சின் ஆரம்பித்தபோது ஒவ்வொரு ஆண், பெண், குழந்தைகள் உட்பட ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபிள் பெறுமதியான உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது. இதனைக் கொண்டு அவர்கள் அரச பொருளாதார துறைகளில் முதலீடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் இறுதியில் வெறும் கண்துடைப்பாக எல்லாரையும் முதலாளிகள் ஆக்கும் வெறும் ஆசை வார்த்தைகளாக மாறியது. மிக நீண்ட காலமாக வேறுபட்ட பொருளாதார, அரசியல் முறைகளில் ஆழமாக வேரூன்றியிருந்த மக்களின் புதிய முடிவுகளை உடனே சீரணிக்க முடியவில்லை எனப்படுகின்றது. உதாரணமாக அண்மையில் கூட்டுப் பண்ணைகள் வேலை செய்வோரிடையே கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டபோது அவர்கள் தமக்குசொந்தமாக நிலம் வேண்டாம்என்றும் பொறுப்புக்கள் குறையவிருக்கும்தற்போதைய முறையே தமக்குப் போதுமானது என்றும் கூறினர். அத்தோடு மேற்குலக சனநாயக வழிமுறைகளும் மக்களுக்கு புரியவில்லை. பல கட்சிகள் உருவாக்கம் பெற்றபோதும் ஒரு சனநாயகப் பண்புடைய அடித்தளத்தை யெல்ட்சினால் இன்னமும் உருவாக்க முடியவில்லை. மேற்குலகத்தின் கூடிய ஆளுமை கொண்ட தனிநபர் சமுதாய அமைப்பு முறையும் இங்கில்லை. இத்தகைய மாற்றங்களை வரவேற்க, உள்வாங்க ஒரு தலைமுறை இடைவெளியாவது வேண்டும் என சமூகவியலாளர் கருதுகின்றனர். எனவே சனநாயக கோசம் வெறும் வெற்று வேட்டாக இருக்க, செல்வாக்குள்ள முன்னாள்கட்சித் தலைவர்கள், பெரும் முதலாளிகளாக மாற பன்னாட்டு வர்த்தகக் கம்பெனிகள் இங்கு கடைவிரிக்க, ஆரோக்கியமான போட்டிக்குபதிலாக ஏகபோக நிலை தொடர, முதலாளியம் முழுமையாக புகமுன்னர் அதன் இழிவான பயங்கர வன்முறைப்பக்கம் புரிந்துவிட்டது. சனநாயகம் எனக்கூறி மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் முயற்சியே அரங்கேறுகிறது. ஆனால் யெல்ட்சினுக்கோ இவை பற்றி ஆழமான பார்வையோ அல்லது இவற்றினை தீர்ப்பதற்கான பொறுமையோ இருப்பதாகத் தெரியவில்லை. அவர் தொடக்கத்திலேயே நாடாளுமன்றத்தைப் பகைக்காமல் சனநாயக அடித்தளங்களை உருவாக்கி பக்குவமாக தனக்கு ஆதரவான நிலையை உருவாக்குவதை விட்டு அவசரம் அவசரமாக ஆணைகளைப் பிறப்பித்து இராணுவ பயத்தைக் காட்டி ஆள்வது பொருத்தமற்றது என ஆய்வாளர் கருதுகின்றனர். இவரது இத்தகைய பலவீனத்தை இவரது அரசியல் எதிரிகள் முழுமையாக பயன்படுத்திதம்மைபலப்படுத்திவருவதால் வாக்கெடுப்பின் பின்னரும் நிலைமை இழுபறியிலேயே இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

## 75 வருட வரலாற்று சோகம்

இத்தகைய பின்னணியில் மாபெரும் உலகப் புரட்சியின் மைந்தர்களான ருஷ்ய மக்களோ 75 வருட வரலாற்று சோகத்தை தாங்கி நிற்கின்றனர். பழைய கம்யூனிச முறைக்கு போக முடியாமலும் (அல்லது போக விரும்பாலும்) புதிய மாற்றங்கள் தமது வாழ்க்கைத் தரத்தினை முற்றாகநாசம் செய்ததால் அதில் நம்பிக்கை இழந்தும் அவர்கள் இரு நிலைகட்குமிடையில் அல்லாடுகின்றனர். அதைவிட விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால் தோன்றிய நிலையைப்பயன்படுத்தி உருவாகிய அதிகார முதலாளிய வர்க்கமொன்று மேற்கு நாடுகள் யப்பானில் இருப்பதுபோன்று பெரும் இரகசிய வன்முறை உலகத்தை உருவாக்கி அதன் மூலம் முழு பொருளாதாரத்தையுமே தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவ் இரகசிய வன்முறைக் குழுக்கள் ஒரு காலகட்டத்தில் செஞ்சேனை எனப் போற்றப்பட்டு இன்று சிதைந்து போன இராணுவத்தின் வீரர் பலரைக் கொண்டதாகவுள்ளது. உலகின் இரண்டாவது பெரியதும் 35லட்சம் படை வீரர்களைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட தலைமையைக் கொண்டிருந்த இராணுவம் பல்வேறு குடியரசுகளிலிருந்தும் விரட்டப்பட்டு — இன்று ருஷ்யாவில் கவனிப்பாரற்று சோர்ந்து போயுள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து திருப்பி அழைக்கப்பட்ட இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவத்திற்கு இருப்பதற்கே இன்று ருஷ்யாவில் இடமில்லை. ஊழல்மலிந்த தலைமையற்ற - ஒழுங்கற்ற- இராணுவமாக இன்று மாறிவிட்டது. முன்னாள் சோவியத் குடியரசுகளிலிருந்தும் தற்போதைய ருஷ்ய நாட்டின் பிராந்திய குடியரசுகளினாலும், ருஷ்ய இராணுவத்தை வெளியேறுமாறு பணிக்கப்பட்டபோது பெருமளவு ஆயுதங்கள்விற்கப்பட்டன. வெறும் கையோடு வீடுபோய் என்ன செய்வது என்றும், வேதனம் ஒழுங்காக கிடைக்காததாலும் இராணுவம் ஆயுதங்களை விற்க, முழு ருஷ்யாவுமே இன்று ஆயுதச் சந்தையாகிவிட்டது. திடுக்கிட வைக்கும் அளவுக்கு ருஷ்ய இராணுவம் இன்று சிதைந்து, ஒருதொகுதி ருஷ்யாவில் நிலை கொண்டுள்ளது. அதிலும் 55வீதத்திற்கு மேலானோர் யெல்ட்சினின் சீர்திருத்தங்களை விரும்பவில்லை. இந்நிலை இன்று எல்லா மொஸ்கோ வாசிகளும் ஆயுதம் வைத்திருக்க விருமபுகின்றனர் என்பதில் போய் முடிந்துள்ளது.

## பலவீனமடையும் ருஷ்ய மத்திய அரசு

இராணுவபலவீனத்தாலும். யெல்ட்சின் - குஷ்புலட்டோவ் மோதலாலும் ருஷ்ய மத்திய அரசுமிகப் பலவீனம்அடைந்து வருகின்றது. ருஷ்யா ஒருதேசிய இனநாடல்ல. ருஷ்ய இனத்தை விட வேறு 100க்கு மேற்பட்ட இனக்குழுக்கள் அங்குள்ளன. பல பிரதேச சுயாட்சி பெற்ற குடியரசுகளாக அவை இயங்குகின்றன. அவை மேலும்மேலும் கூடிய அதிகாரங்களைக் கோருகின்றன. சில ஏற்கனவே மக்கள் வாக்கெடுப்பை நடத்தி பிரிந்து செல்லும் மக்கள் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டன. இந்நிலைநீடித்தால் 50,60க்கு மேற்பட்ட நாடுகளும், 1000 வருடங்கட்கு தொடரும் போரையும் நாம் காண நேரிடும் என்று யெல்ட்சின் தனது இராணுவ அதிகாரிகளுக்கு அண்மையில் கூறியதாக தெரிகின்றது. குறிப்பாக ஏற்கெனவே இசுலாமிய இனத்தவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தாத்தாரியர் வாழும் பகுதி (Tatastan) 1992ஆம் ஆண்டே பிரியப்போவதாக முன்னறிவிப்புசெய்துவிட்டது. இன்னொரு முசுலிம் குடியரசான (Baskhkovzastan) பிரியப்போவதாக அச்சுறுத்துகின்றது. சக்காலின் தீவுக் குடியரசுகளோ தாங்கள்யெல்ட்சினின் அடிமைகள் அல்ல என்கிறது. ருஷ்ய இனத்தவர் வாழும் சைபிரிய பகுதி குடியரசுகள் கூட கூடிய சுயாட்சியை கோருகின்றன. காக்கசஸ் பிராந்தியத்தின் நிலை யெல்ட்சினுக்கு அச்சமூட்டும் வகையிலேயே உள்ளது. இங்குள்ள சிறிய குடியரசான செச்னயா (Chechnaya) 1991ம் ஆண்டே தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து தனது பகுதியிலிருந்து ருஷ்ய இராணுவத்தை வெளியேற்றிவிட்டது. வெளியேறிய ருஷ்ய இராணுவம் விற்ற ஆயுதங்களால் இப்பகுதி நிரம்பி வழிகின்றது. இன்று தெருவோரங்களில் கிளாஸ்னிகோவ் சுடுகலன் ஒன்று 1200 டொலருக்கும் மக்கரோவ் (Mackarov) கைத்துப்பாக்கி 350 டொலருக்கும் ஒரு பசூக்கா 80டொலருக்கும் வாங்க முடியும். இதுவே இராணுவ தனியார் மயமாக்கல் எனப்படுகின்றது. இவ்வாறு படிப்படியாக முன்னாள் சோவியத் குடியரசுகள் பிரிந்த நிலைக்கு ஒப்பானதொரு நிலை இன்று ருஷ்ய குடியரசுகள் மத்தியில் காணப்படுவதாக கருதப்படுகின்றது.

## பெருகுகின்ற விவசாரம்

இத்தகையதொரு நிலையில் ருஷ்ய சமுதாயமோ மனம் போன போக்கில் வாழத் தொடங்கிவிட்டது. எதிர்காலம் குறித்து நம்பிக்கையற்ற நிலையில் ஒரு பகுதியினர் எவ்வித நெறிகளுமற்ற வாழ்க்கை முறைகளையும், இன்னொரு பகுதியினர் பல்வேறு மத நம்பிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்துகின்றனர். யெல்ட்சினே எதிர்பாராத ஒரு திருப்பமும் இச் சமுதாயத்தில் இன்று தோன்றுகின்றது. வருமானக் குறைவு, வேலையின்மை, மேலைத்தேய ஆடம்பரப் பொருள்மோகம், நெறியோடிருந்த சமூகத்தின் அடித்தளத்தை ஆட்டம் காண வைத்துள்ளது கடந்த 12மாதத்திற்குள் ருஷ்யாவில் 200க்கு மேற்பட்டபெண்களை உடலை விற்கும் தொழிலில் ஈடுபடுத்தும் நிறுவனங்கள் தோன்றி ஏறத்தாழ 10,000பெண்களை வேலையில் ஈடுபடுத்தியுள்ளன மேலதிக வருமானத்திற்காக ஆசிரியர், வைத்தியர் என எல்லாத் தரப்பினருமே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். தனது ஆசிரிய தொழிலில் கிடைப்பதைவிட 100மடங்கு வருமானம் கூடுதலாகக் கிடைப்பதாக ஒரு ஆசிரியை தெரிவிக்கின்றார். எல்லாவற்றையும் விட மிக இழிவானது 15 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரே கூட இத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதுதான் இன்று புகழ்பெற்ற புரட்சியின் சின்னமான செஞ்சதுக்கத்திலேயே 12,13 வயதுச்சிறுமியர்கள் அங்கும் இங்கும் வாடிக்கையாளரைத்தேடி அலையும் காட்சி சாதாரணம் அதைவிட அதிர்ச்சி - சென் பீட்டர்ஸ் பேக் பெண்கள் உயர் கல்லூரியில், மிக விரும்பும் முக்கிய பத்து தொழில்களை வரிசைப்படுத்துமாறு கேட்கப்பட்ட போது மூன்றாம் இடத்தை இவ் உடலை விற்கும் தொழிலுக்கே அளித்தனர். (முதலிடம் இராசதந்திரத்துறை, இரண்டாமிடம் பத்திரிகைத்துறை) இத் தொழில் இரகசிய வன்முறை உலகோடு தொடர்புபடுத்தப்பட்டு தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் வழங்கும் 'தாதாக்கள்', 'குண்டர்' 'மாமூல்மாமாக்கள்' போன்ற சொற்றொடர்களின் அகராதி ருஷ்ய மொழியிலும் தோன்றி விட்டது. இவ்வாறாக ருஷ்ய சமுதாயத்தின் புனிதம் சந்தைப் பொருளாகி விட்டது.

## கடவுள்களுப், சாத்தான்களும்

இதன் மறுபக்கமான மாற்றமும் அங்கு நிகழ்கின்றது. கம்யூனிச வீழ்ச்சி ஏற்படுத்திய வெற்றிடம் புதிய மாற்றங்களை உள்வாங்க முடியாத குழப்பமான மனநிலை ருஷ்யர்களை ஆன்மீக வழியில் தஞ்சம் புக வைக்கின்றது. புதிய சமுதாயத்தில் கடவுளும் இயங்க, சாத்தானும் இயங்கத் தொடங்கி விட்டான் என்கிறார் ஒரு மதவாதி. தலைவர்களை நம்ப முடியாது; இறைவனே நம்பத் தகுந்தவன் என்கிறார் இன்னும் ஒருவர், பழமைவாத மதக்கோட்பாட்டுப் பீடங்கள் மட்டுமன்றி, நவீன மத அனுட்டான பிரிவுகள், கிறித்தவ மதத்தின் பல பத்துப் பிரிவுகள் பில்லி சூனிய. மந்திர தந்திர மத அமைப்புக்கள், ஹரே கிருஷ்ணா இயக்கம் என எல்லாமே இங்கு வேகமாகப் பரவுகின்றன. தீய ஆவிகளை விரட்டல், சோதிட நம்பிக்கை மக்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. 'யேசு ரட்சிப்பார்' என்றும், 'கிருஷ்ணர் அவதரிப்பார்' என்றும் பெரும் விளம்பரப் பலகைகள் எங்கும் தென்படுகின்றன. மொட்

(8ஆம் பக்கம் பார்க்க)

O/L - 93 DAY CLASS

ESTD 1973 REGD No 3/7993
The Express Institute
IRUPALAI KOPAY
MATHS
MR. T. VARATHARAJAH

(சி/6526) ஏனைய பாடங்களுக்கும் அவ்வாறே திறமைமிக்க ஆசிரியர்கள்

2-வது ஆண்டு நினைவு நாளில் எம் வீரஅஞ்சலிகள்



வீரவேங்கையர்

1. காமினி
2. சிவனேசன்
3. ஸ்ரீகாந்
4. ஸ்ரீபன்
5. ஆனந்தராஜ்
6. நாகேஷ்

வீரவேங்கையர்

7. பவீந்திரன்
8. மதியழகன்
9. ஸ்ரீதரன்
10. டேவிற்
11. குமார்

வீரப்பிறப்பு
14 – 05 – 1966

லெப். அப்பா (சுந்தரலிங்கம் குமாரலிங்கம்)

வீரச்சாவு
30 – 04 – 1991

இவர்கள்
நீராவியடியில் தற்செயலான வெடிவிபத்தில்
எமைப் பிரிந்தவர்கள்
விடுதலைக்காய்-இவர்கள் விரைந்தவேளை
விறகாகினர் வீர காவியமாயினர் - இவர்கள்
கலந்த காற்றில் சுவாசத்தில் – நாங்கள்
புதியதென்புடன் – புது வரலாறு படைப்போம்.

[4789]

-நண்பர்கள்-

## ருஷ்யா

டையடித்த — காவி தரித்த ஹரே கிருஷ்ணா சாமியார்கள் — உடுக்குடனும், பறையுடனும் மொஸ்கோவின் பிரதான கடைத்தெருக்கள், உணவு விடுதிகள் முன் பஜனை செய்கின்றனர். இன்று ஏழு இலட்சம் பேர் தங்கள் உறுப்பினர் எனக் கூறும் இவர்கள் அமைப்பே வேகமாக வளர்கிறது. திடீரென வந்த சுதந்திர மனப்பான்மை தீவிர வெறித் தன்மையுள்ள மதநம்பிக்கைகளை மக்கள் பின்பற்ற வழிவகுப்பதாகக் கருதப்படுகிறது.

இத்தகைய கதம்ப நிலைகளின் மத்தியிலும் ருஷ்யாவுக்கு பிரகாசமான எதிர்காலமிருப்பதாகக் கருதுவோரும் இல்லாமல் இல்லை. தற்காலிக தடைகள் நீங்க 1994-ம் ஆண்டளவில் பொருளாதாரம் சீரடையும் என்றும், 1995, 1996களில் புதிய அரசியல் திட்ட அடிப்படையிலமைந்த சனநாயகக் குடியரசாக ருஷ்யா மாறும் என்றும் 21-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வளர்ந்து வரும் புதிய மத்திய வகுப்பு மேலைத்தேயம் போன்ற சனநாயக வழிமுறைகளை இறுக்கமாக்கி ருஷ்யாவை வளமிக்க எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் என்றும் கருதப்படுகின்றது.

இது எப்படியிருந்தபோதும் கோர்பி, கோர்பி என்று புகழின் உச்சாணிக் கொம்புக்கு ஏற்றி பின் தலை தெறிக்க அவரை வீழ்த்திய மேற்குலகம் யெல்ட்சினை முழுமையாக ஆதரிப்பதே யெல்ட்சினின் ஒரே பலம். எனவே இன்று யெல்ட்சின் மீண்டும் ஒருமுறை தனது குடிமக்களை தனது வார்த்தையில், சனநாயகத்தில், சந்தைப் பொருளாதார முறையில் நம்பிக்கை வைக்கச் செய்ய வேண்டும் ஏனென்றால் தமது பட்டறிவு காரணமாக எவ்வித கோட்பாடுகளையோ. அரசியல் சுலோகங்களையோ வெறுமனே அப்படியே நம்ப இன்று ருஷ்ய மக்கள் தயாராக இல்லை.

"அவன் பொய்யுரைக்கின் கற்குடம் சுமந்து தென்திசை செல்வேன்"
வசிட்டர்

"அவன் பொய்யுரைக்காவிடின் என்தவத்திற் பாதிகொடுப்பேன்"
விசுவாமித்திரர்

இன்று தொடக்கம் மூன்று நாட்கள் மேடையேறுகிறது

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

ஏப்பிரல் 30-1993
மே 2, 3- 1993

"சத்திய வேள்வி"

தினமும் மாலை 6.45 மணி

[ அரிச்சந்திர மயான காண்டம் ] இசைநாடகம்

மன்றக் கலைஞர்களாகிய தைரியநாதன்

★ ஜெசிமன் ★ கயல்விழி ★ டயானா

இவர்களின் உயர்ந்த நடிப்பு உணர்ச்சிமிகு பாடல்கள்

[சி-6534]

இடம்: மன்ற அரங்கு - யாழ்ப்பாணம்.

ஆசனப்பதிவுக்கு முந்துங்கள்

# லலித்தின் றுதி நிமிடங்கள்

த்துலத்முதலியைகடை நர்கண்ட செய்தியா நான்தான் இருக்க . 22, ஏப்ரல் பகல் மணிக்கு நான் அவரைச் ாக ஏற்பாடாகியி

ல் காலையில் எழுந்த தே பல தூர்க்குறிகள வதை உணர்ந்தேன். ய ஆடைகள் தொந் தன. என்னுடைய ரை ஸ்டார்ட் செய்த தை என்னால் கட் த்த முடியவில்லை. டய முன்பக்க ரயர் ப்போய் விட்டது. கரைச்சல் தந்தது. ாறாக சமாளித்துக் ண்டு புறப்பட்டபோது மைக்கு மாறான குறிகளை தானித்த எனது மனைவி னை எச்சரித்தாள், வாக ்தை கவனமாக ஓட்டும் ,, ......

ப்படிக் கூறுகிறார் டே ரைம்சின் செய்தி ார் றோகான் அபயவர்த் . லலித்துடனான அவரது

ஏப்ரல் 23 ஆம்திகதி, இரவு 8.55 மணியளவில் கிருலப்பனயில் லலித் சுடப்பட்டார்.

இரவு 8.40 மணியளவில் லலித் மேடையில் ஏறினார் மழை தூறிக்கொண்டிருந்தது. மழைக்குப் பாதுகாப்பாக மக்கள் மைதானத்தில் அங்குமிங்கும் கலைந்து ஒதுங்கி நின்றார்கள் மேடை ஹவ்லொக் வீதியைப் பார்த்தபடி அமைக்கப்பட்டிருந்தது. கொழும்பு கிழக்கு டி. யு. என். எவ் வேட்பாளர் உப்பிள் தம்மிக்கா கூடியிருந்தவர்களுக்கு முதலில் உரையாற்றினார். மக்கள் கூட்டம் ஹவ்ஸ்ரொப் கூட்டத்தில் காணப்பட்டதை விடவும் குறைவாக இருந்தது


தம்மிகாவிற்குப் பிறகு லலித் பேச எழுந்தார். அப்பொழுது கறுப்பு ரி சேட்டும் டெனிம் கால்சட்டையும் அணிந்த திடகாத்திரமான நபர் ஒருவர் மேடையின் வலப்பக்கம் ஒதுங்கியிருந்த சுமார் இருபது பேர்களிற்கிடையில் நின்றபடி லலித்தை கவனித்துக் கொண்டிநருதார்.அவருடய கையில்

வலக்காலில் சுடப்பட்ட மெய்க்காவலர் நிலத்தில் வீழ்ந்தார். துப்பாக்கி மனிதர் மேடையிலிருந்து விலகி ஓடத் தொடங்கினார். மக்கள் பின் தொடர்வதைத் தடுக்க மறுபடியும் வேட்டுக்களைத் தீர்த்தபடி ஓடியவர் வெள்ளை நிற வான் ஒன்றில் ஏறினார். வான் விரைந்து மறைந்தது.

மேடையில் லலித்தின் சகாவான வழக்கறிஞர் மகேந்ர அமரசேகர, லலித் குனிந்து தப்பியிருப்பார் என்று தான் நினைத்தார். திரும்பிப்பார்த்தார். லலித்தின் சேர்ட் இரத்தத்தில் தெப்பமாய் நனைந்து போயிருந்தது. அப்பொழுதும் லலித் சுயநினைவு டனிருந்தார்.

மெய்க்காவலர்மூவர் அவரை காரில்கொழும்புபெரியஆஸ்பத்திரிக்குஎடுத்துச்சென்றார்கள். வழியில் லலித் மெய்க்காவலர் ஒருவரிடம் கூறினார் ''கெதியாக என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ'' ஆஸ்பத்திரி

அவசர சிகிச்சைப் பிரிவில்




பல் ஒன்று லலித் கொல்லப்பட்டு விட்டார் என்று கத்திக் கொண்டு நின்றது.

விபத்துப்பிரிவின் உள்ளே, காமினி, அழுது கொண்டிருந்த லலித்தின் மனைவி சிறிமணியைக் கண்டார். காமினியும் விம்மத் தொடங்கினார். அவர் சிறிமணியை ஆதரவாக அணைத்தபடி அழைத்து வந்து வாகனத்தில் ஏற்றி அனுப்பினார் பிறகு அவசர சிகிச்சைப் பீரிவுக்குத் திரும்பி வந்தார். கதவு மூடியிருந்தது. அவசர சிகிச்சைப் பிரிவின் கதவருகே நின்றபடி காமினி விம்மலானார். சில நிமிடங்களின் பின் அவர் அறைக்குள் செல்ல அநுமதிக்கப்பட்டார். அங்கு கொல்லப்பட்ட லலித்தின் நெடிய உடல் கிடத்தப்பட்டிருந்தது.


காமினி வாகனத்திற்குத் திரும்பி வந்தார். வாகனம் விபத்துப் பிரிவிலிருந்து புறப்பட்ட சமயம் எம். ஈ. பி. தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் அவருடைய சகோதரர் கிதாஞ் சனாவும் எதிர்ப்பட்டார்கள்.காமினிதினேஷின் வாகனத்தை நிறுத்தச்சொன்னார் ''அவர் போய் விட்டார்.'' 'தினேஷ்காமினியிடம் சொன்னார் நீங்கள் மிகவும் கவனமாயிருங்கள்''.—

வாகனம்ஓடத்தொடங்கியது. காமினி விம்மல் களினூடாகச் சொன்னார் ''இந்த நாட்டிற்குத் தருவதற்கு அவர்நிறைய வைத்திருந்தார்''—

கொல்லப் படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு புதுக்கடையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் லலித் உரையாற்றினார் ''நாங்கள்யானைக்குக் குறி வைக்கிறோம். யானை விழுந்துவிடும். அதேநேரத்தில் புலி தப்பி விடக்கூடாது.நாம் ஆழமாக சிந்தித்துச் செயல் படவேண்டும்''.

இவ்வாறு பேசிய ஒரு மணி நேரத்தின் பின் கிருலப்பனயில் அவரை நோக்கிக் குறி வைக்கப்பட்டது. இதற்கு முந்திய இரு சந்தர்ப்பங்களையும் போலல்ல இம்முறை குறி தப்பவேயில்லை.

லலித்: கொலையை விபரிக்கும் காட்சி




ால் - அதாவது லலித் சிச் செவ்வி ஏப்ரல் டே ரைம்சில் பிர யுள்ளது. அவர் கூறுகிறார் ......

நேர்காணலின் படி அத்துலத் முத டக்குமென்று எனக் ான்றவேயில்லை. முதலி தனது பாது பற்றி கவலைப் லை. விசயங்கள் பாக்கில் பலருடைய கு ஆபத்து உண்டு ர் முன்னர் கூறிய றாரு எதிர்க்கட்சித் சொல்லக் கேட்டி சந்திப்பிற்கு ணிநேரம் தாமதித் நான் சென்றேன். முதலி என்னைக் கம் சுழிக்கவில்லை. சியல் வாதிகளைப் ல் பத்திரிகை முகம் கொடுக்கும் கேள்விகளுக்குப் ன்னார். அன்றைய ில் விசேசம் என்ன நான் வழமை ரிடம் குறுக்கிட்டுக் கேட்கவில்லை''

த்தன லலித்தை பின் அடுத்தநாள்

கோல்ட்லீவ் சிகரட் காணப்பட்டது.மைக்கிலிருந்து சுமார் 10யார் இடைவெளியில் அவர் நின்றிருந்தார்.

அத்துலத் முதலி பேசிக் கொண்டிருந்தார்.

கறுப்பு ரீசேர்ட் மனிதர் திடீரென்று சிகரெட்டை புகைத்து முடிக்காமலே எறிந்தார்.

ரிசேட்டை முன்பக்கமாகவே உயர்த்தி காற் சட்டைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தார்.

லலித்தின் மெய்க்காவலர்கள் சுதாகரிப்பதற்குள் மூன்று வேட்டுக்கள் லலித்தை நோக்கி தீர்க்கப்பட்டன அப்பொழுது நேரம்இரவு 8.55.

உடனடியாக மெய்க்காவலர் ஒருவர் கறுப்புரிசேட் காரரை நோக்கிச் சுட்டார்.

மேடை வெளிச்சங்கள் அணைந்து போயின. மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது.

துப்பாக்கிமனிதர் தரையில் வீழ்ந்தார். அவரது வயிற்றில் காயப்பட்டிருக்கலாம். எனினும் உடனடியாக எழுந்துநின்றார். மெய்க்காவலரை நோக்கிச் சுட்டார்.

மார்பு அறுவைச் சிகிச்சைநிபுணர் எஸ். ஜே. ஸ்ரீபன் தலைமையிலான மருத்துவர் குழு அவரைக் காப்பாற்றப்போராடியது. அவரது மார்பை சன்னங்கள் துளைத்திருந்தன. இடது கையிலும் காயம் இருந்தது. இருதயம் இயங்கவில்லை. இருதயத்தைஇயங்க வைப்பதற்காக மசாஜ் செய்யப்பட்டது. எனினும் இரவு 11.05 மணியளவில் லலித்தின் உயிர் பிரிந்தது இறக்கும் போது அவருக்கு வயது 57.

''நான் அவருடைய கடைசி வார்த்தைகளைக் கேட்டது. அவர் சாகுல் ஹமீற்றைப்பேச அழைத்தபோதுதான். பிறகு அவருடைய அணி கிருலப்பனக்குச் சென்றது. நான் கொழும்பு மத்திக்குச் சென்றேன். நாங்கள் ஒருவர் மற்றவரை சில நிமிடங்களில் இழந்து விட்டோம்'' .. இப்படிக் கூறினார். லலித்தின் நெருங்கிய நண்பரும் டி.யு.என்.எவ். தலைவர்களுள் ஒருவருமான காமினி திசநாயக்க. லலித் சுடப்பட்டதை கேள்விப்பட்டதும் காமினி விபத்துப் பிரிவுக்கு விரைந்தார்.

அங்கு ஆத்திரமடைந்த கும்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் 1992ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் மிகச் சிறப்பாக சித்தியடைந்த மாணவிகளுக்கு இன்று காலை 8-00 மணிக்கு பரிசில் வழங்கி கௌரவிக்க பாடசாலை அபிவிருத்திச்சங்கம் முன்வந்துள்ளது. மேற்படி பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், யாழ். பல்கலைக் கழக விளையாட்டுத்துறை இயக்குநருமான திருவாளர் சி. தியாகராஜா அவர்கள் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

## புதிய அடையாள

வருகிறது.

இதற்கென நவீன இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படவுள்ளதாகவும் இதற்கென 5 சோடி ரூபா செலவிடப் படவுள்ளதாகவும், இந்நவீன இயந்திரம் மூலம் எவரும் மாற்ற முடியாத அடையாள அட்டை வழங்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போது லெமிநெற் செய்யப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் இதனை மாற்றி மோசடியான முறையில் உபயோகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## இறுதிப் போட்டி

உற்பத்தி எழுச்சி வாரத்தை முன்னிட்டு கடற்புலிகளின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கோட்ட ரீதியாக நடாத்திய போட்டிகளுக்கான இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று வடமராட்சியில் நடைபெறவுள்ளன.

கிடுகு பின்னுதல், விளக்குமாறு தயாரித்தல், தும்புத்தடி தயாரித்தல், புதிய வகை உணவு தயாரித்தல், வலை பின்னல், கம்பாகம் குத்துதல், நீச்சல் போட்டி பாய்மரம் ஓட்டுதல், கட்டுமரம் வலித்தல், துலா மிதித்தல், பனைமரம் ஏறுதல், குட்டான் இழைத்தல் ஆகிய போட்டிகள் கோட்ட ரீதியாக நடாத்தப்பட்டன.

கோட்ட ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பல பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதாரம் காட்டி பெறவும்

295790130 V என்ற இலக்கமுடைய சிவக்கொழுந்து தாமோதரம்பிள்ளை என்பவரின் அடையாள அட்டையுடன் கூடிய பொருள்கள் அடங்கிய பொதி ஒன்று வவுனியா தடை முகாமில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஆயிலியப்பிட்டி**

வந்த விபரங்களை இங்கு சுருக்கித் தருகின்றோம்.

ஒருவருடத்திற்கு முன்னர் நடராஜா தயானந்தன் அல்லது காளிதாஸ் என்பவர் கோண்டாவிலில் வசிக்கும் பெண் ஒருவரை விரும்பியிருந்தார். கொலையுண்ட நலரட்ணராஜா சுதர்சன் என்பவரும் அதே பெண்ணைக் காதலிக்க விரும்பினார். இதன் காரணமாக நடராஜா தயானந்தன் அல்லது காளிதாஸ் என்பவர் தான் விரும்பியிருந்த பெண்ணைச் சுதர்சன் காதலிக்க முயற்சித்தமையினால் கோண்டாவிலைச் சேர்ந்த சிவகுருநாதன் குகநேசன் அல்லது குகன் (மெக்கானிக்) என்பவரின் உதவியுடன் சுதர்சனை பழிவாங்க நினைத்தார். எனவே ¢6-01-92 ஆம் நாள் பிற்பகல் 2-00 மணியளவில் இணுவிலில் அமைந்துள்ள பத்திரிகைக் கடையொன்றில் சுதர்சன் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தபோது குகன் காளிதாசுக்கு சுதர்சனைக் காண்பித்தார். உடனடியாக காளிதாஸ் சுதர்சனைசந்தித்து கதைத்து தன்னுடன் வருமாறு கூறி இருவருமாக குகனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். குகனுடைய வீட்டில் வைத்துகாளிதாஸ் தான் காதலித்த பெண் விடயமாக சுதர்சனுடன் கதைத்த பின்னர் அவரைக் காளிதாசும், குகனும் சேர்ந்து பலமாகத் தாக்கி, அடித்துக் கொலை செய்துள்ளனர். கொலையுண்ட சுதர்சனின் உடலை ஸ்கூட்டர் ஒன்றில் அன்றிரவே குகன் (மெக்கானிக்) ஓடிச்செல்ல, ஈசன் என்பவர் ஸ்கூட்டரின் பின்பக்கத்தில் தனக்கும், குகனுக்கும் இடையில் வைத்துக் கொண்டு கோண்டாவிலில் இருந்து நாவற்குழிக்கு எடுத்துச் சென்று ஆயிலியப்பிட்டி மயானக் கிணற்றில் போட்டுள்ளனர். ஸ்கூட்டரில் இறந்தவரின் உடலை எடுத்துச் செல்லும்போது இறந்தவரின் உடலுக்கு மழைக்கவசம்ஒன்று அணிவிக்கபட்டுஎடுத்துச்சென்றுள்ளனர். இவ்வாறு கொண்டு செல்லுபோது இறந்தவருடைய உடல் உயிருள்ள நபர் போல் இருக்கவைத்து, பின்பக்க சீற்றிலிருந்த ஈசன் என்பவர் பிடித்துச்சென்றுள்ளார். காளிதாஸ் என்பவர் இவர்களுக்குப்பாதுகாப்பாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் தொடர்ந்து சென்றுள்ளார். மயானத்தை அண்மித்ததும், இம்மூவரும் சேர்ந்து கொலையுண்ட சுதர்சனின் உடலை இழுத்துச் சென்று மயானக் கிணற்றில் போட்டுள்ளனர். இரு நாட்களின் பின் அப்பிரதேசத்திற்கு விறகு வெட்டச் சென்ற பொதுமகன் ஒருவர் கிணற்றில் இருந்த உடலைக் கண்டுள்ளார். உடனடியாகக் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தார். புலன் விசாரணை மேற்கொண்ட காவல் துறையினர் குற்றவாளிகளை தகுந்த ஆதாரங்களுடனும், சாட்சிகளுடனும் நிரூபித்துள்ளனர். குற்றவாளிகள் இருவருக்கும் கொலைக்குற்றத்திற்கான மரணதண்டனை வழங்கப்படும்.

இக்கொலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளி நடராஜா தயானந்தன் அல்லது காளிதாஸ் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து பின்னர் விலகியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையைமேற்கொண்ட காவல்துறையினருக்குபிரயோசனமான தகவல்களைத் தந்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்குஉதவிய பொதுமக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லலித் இறுதி ஊர்வல கல்வீச்சு; தொண்டமான் வீடு சேதம்

லலித்தின் இறுதி ஊர்வலத்தின் போது கொழும்பு நகரில் நேற்று முன்தினம் பரவலாக இடம்பெற்ற வன்முறை, தீவைப்பு சம்பவங்கள் குறித்து தகவல் திணைக்களம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் திடீரென மேற்கொண்ட கல்வீச்சில் அ... சர் தொண்டமானின் சேதத்திற்குள்ளானது ...ரின் வீட்டுக்கு அரு... இந்தோனேசிய பாது... இணைப்பாளர் அலுவல... இதனால் பாதிப்பி... னது. இதனைத் தெ... கறுவாக்காட்டு பொ... யம் தாக்கப்பட்டது. ...றோல் குண்டுகள் ப... தப்பட்டு இரு பொலி... ங்கள் தீக்கிரையாக்க... பண்டாரநாயக்க ... ண்டபத்தின்முன் இ... யத்தன விகாரை... யாக தாக்கினர். ... பொருள்கள் சூறை... டன.

பொலிசார் நிலை... கட்டுப்படுத்த இறப்ப... துப்பாக்கிச் சூடும், க... புகை வீச்சும் நடத்தி...

## மக்கள் அஞ்சலிக்கு

வவுனியாவில் நேற்று வீரச்சாவடைந்த வீரவேங்கை புலித்தேவன்/பபி [சின்னையா தெய்வேந்திரராசா தோற்பிட்டி கோப்பாய் தெற்கு, கோப்பாய்] எனும் போராளியின் புகழுடல் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில் விதைக்கப்படும்.

**நாளை**

யில் இருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளும் பொதுமக்களுக்கு பல்வேறு தொழிலாளர் அமைப்புக்கள் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. இவ் எழுச்சிப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் நலன் கருதி பல்வேறு இடங்களில் தாகசாந்தி நிலையங்களும் முதலுதவிச் சிகிச்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எழுச்சிப் பேரணியின் இறுதியில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உட்பட பல்வேறு தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்துவார்கள். (க)

**இனம்**

னரே நேற்றுமுன்தினம் கலவரங்களை ஆரம்பித்து நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கண்ணீர்ப் புகை குண்டுவீச்சு நடந்தபோது படுகாயமுற்ற ஒருவர் நேற்று மருத்துவ மனையில் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இறந்தோர் தொகை 2 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் இக்கலவரங்களில் 30 பேர்காயமடைந்தமை தெரிந்ததே.

**உலங்குவானூர்தி**

வும், கலவரத்தை அடக்க அவை வீசப்பட்டதாக கூறப்படுவது அபத்தமானது எனவும் அவர் தெரிவித்தார். இக் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு திட்டமிட்ட ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.

**பல்கலைக்கழக**

கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை செயலாளர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, இலக்கம்: 20, வோர்ட் பிளேஸ் கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்

## 2-வது பிறந்த தின வாழ்த்து

02-05-1993



**செல்வி ஜெ. யசோதினி (யசோ)**

வட்டக்கச்சி சில்வாவீதி இல. 25இல் வசிக்கும் ஜெயநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வபபுதல்வி யசோதினி தனது 2-வது பிறந்த தினத்தை 2-5 93இல் தனதில்லத்தில் மிக விமரிசையாக கொண்டாடுகின்றார்.

யசோக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா. சித்தப்பா, உசன். அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், சித்தி, சரசாலை, மாமா, மாமி வட்டக்கச்சி, அப்பப்பா, அப்பம்மா, அன்ரிமார், பூட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அருள்மிகு ஸ்ரீ மாவடி அம்பாள் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
வே. ஜெயநாதன்
(தந்தை)

(சி-6533)

## எம் நன்றி

வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களின் மறைவின் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அருட் தந்தையர்கள், அருட் செல்விகள் அனைவருக்கும் இன்னும் மலர் வளையங்கள் சாத்தி, ஆறுதல் செய்திகள் அனுப்பி துண்டுப் பிரசுரங்கள் வழியாக தங்கள் அஞ்சலியை செலுத்தியோர்க்கும் பரியோவான் முதலுதவிப்படை. சாரணர், ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் சில்லாலையில் இடம்பெற்ற அடக்க ஆராதனைகளை ஒழுங்கமைத்த சில்லாலை கிராம முன்னேற்றச் சங்கத்தினர், புனித சூசையப்பர் வாலிப சங்கத்தினர் அனைவருக்கும் மேலும் பற்பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றி.

— வைத்திய கலாநிதி நீற்றா இன்னாசித்தம்பி
ஜொவித்தா இன்னாசித்தம்பி
துஷாரா, டனுஷ்தன் இன்னாசித்தம்பி

101, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-6536)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**29-04-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9205

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-6933, 41-9111, 24-4185, 26-5850, 24-5939
26,3493, 26-7525

நினைவில் மலரும் இரண்டாண்டு

## கண்ணீர்த்துளிகள்



வீரப்பிறப்பு
08.01.1972

வீரச்சாவு
30.04.1991

வீரவேங்கை

**மதியழகன்/அழகன்**

(சுப்பிரமணியம் மதியழகன்)

திதி-30.04.1993

துள்ளு நடை யெங்கே!
அழகேயுன் சிரிப்பெங்கே!
செந்தமிழ் ஈழத்தைக் காத்திட-நீ
சீறி எழுந்தாய் ஐயா!
ஆனால் அது உருவாகு முன்னரே-நீ
திடீரென ஓடிமறைந்து விட்டாய் ஐயா!

உன்பிரிவால் ...

மதியழகன் வீதி,
கொட்டடி.
யாழ்ப்பாணம். (4788)

சுப்பிரம...
குடும்பத்...

## மரண அறிவித்தல்

**வீரகத்தி முத்துலிங்கம்**

சரசாலை வடக்கைச் சேர்ந்த வீரகத்தி முத்... (லிங்கம்ஸ் உரிமையாளர், சாவகச்சேரி) 29-04-9... சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் திலக... அன்புக் கணவரும், தயாமதி (B.A. ஆசிரிய... கலாசாலை, கோப்பாய்), சுதாமதி (ஆசிரியை கணேச வித்தியாலயம், சரசாலை), சுபாஸ்கரன் (ஜே... சிவாகரன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்... செல்லையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் ச... ரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இ... 30-04-1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிய... அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கொம்பி... மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உ... நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை... கொள்ளவும்.

சரசாலை.
[4794]

தகவல்:
திருமதி மு. திலகவதி (...

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு